*Vol. 2.]* *March, April—1912.* *[No. 7, 8.*

REGISTERED.

# THE GNANAPIRAKASAM.

A MONTHLY JOURNAL DEVOTED TO RELIGION, LITERATURE, SCIENEC &c.

# ஞானப்பிரகாசம்.

யாழ்ப்பாணத்திற் பிரசுரமாகும்

ஒரு மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை.

புத்தகம்—உ. | யாழ்ப்பாணம்:—விரோதிகிருதுவரு மாசி, பங்குனிமீ | இலக்கம்-எ, அ.

## விஷயசூசிகை.


| | |
|---|---|
| வித்தியாமகத்துவம் | அ. குமாரசுவாமிப்பிள்ளை. |
| கல்விகற்பிக்குமுறை | சி. தா. சிதம்பரப்பிள்ளை. |
| சிவகசிந்தாமணி | சிவ. இ. மாரிமுத்து உபாத்தியாயர். |
| ஆனைகமலம் | பத்திராதிபர். |
| கம்பர்கவிசாதுரியம் | „ |
| கோணைப்பாய் | „ |
| புலவர்பாற்சில அதியாவினுக்கள் | ஆர்மாணவகன். |
| பெண்கள்கல்வி | S. ஞானாம்பிகை. |
| அன்னபூரணி | மா. சிவராமலிங்கம்பிள்ளை. |
| கல்வியுஞ்செல்வமும் | S. K. |
| இராசசகாரியம் | S. P. K. சண்முகஐயர். |
| சாந்திக்கதை | மு. குருசாமிப்பிள்ளை. |
| பழிவாங்குதல் | சே. சிவஞானசுந்தரம். |
| சிவராத்திரிவிரதம் | S. V. |
| புத்தகவரவு | பத்திராதிபர். |
| சமாசாரம் | „ |


*B. M. A. Sanmugaretna Sarma Editor & Proprietor.*

ஆ. சண்முகரத்தினசர்மா, பத்திராதிபர்.

யாழ்ப்பாணம் "கணேச" யந்திரசாலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமது ஞானப்பிரகாசத்தைப்பற்றி

யாழ்ப்பாணம், சுன்னாகம் ஸ்ரீமத் அ. குமாரசுவாமிப் புலவரவர்கள் மாணாக்கரும், "நகுலேச்சர விநோதவிசித்திர கவிப்பூங்கொத்து" முதலிய பலபிரபந்தங்களை இயற்றிய நூலாசிரியரும் யாழ்ப்பாணம் வலிகாமம்வடக்குச்சாதனலிகித உத்தியோகஸ்தரும் (Notary) எம்முடன் ஒரே கலாசாலையில் ஆங்கிலமும் ஒரே ஆசிரியரிடத்தில் தமிழ்க்கல்வியும் பயின்றவருமாகிய ஸ்ரீமான் க. மயில்வாகனப்பிள்ளையவர்களிடமிருந்து

கிடைக்கப்பெற்றது.

யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை "ஞானப்பிரகாச" பத்திரிகாசிரியரவர்கட்கு.

மாதத்துக்கொருமுறை புத்தகரூபமாய்ப் பிரசுரமாகுந் தங்கள்பத்திரிகையில் வெளிவந்தசஞ்சிகைகளையெல்லாம் நன்குபடித்துப்பார்த்தேன். அவற்றிலே, பதி பசு பாச சாஸ்திராராய்ச்சி செய்வோர்க்கின்றியமையாத கடவுளியல்பு "சைவபோதம்" "இராமாயணசிவபரத்துவம்" "ஆன்மா" என்பதுமுன்னிட்ட பலவிஷயங்களாதியனவும், இலக்கண இலக்கியவாராய்ச்சி செய்வோர்க்கின்றியமையாத "தொல்காப்பியவாராய்ச்சி" "தொல்லாசிரியர்செய்யுளழகு" "தமிழ்க்கொடை" "சிவசிந்தாமணியாராய்ச்சி" "சேதுபுராணவிரிவுரை" "நல்லவெண்பாவுரை" முதலியனவும், எத்துணைச் சிற்றறிவுடையோரையும் எளிதில் வசீகரித்துத் தெருட்டி நல்வழிப்படுத்தவல்ல "கமலாம்பிகை" யென்றற்றொடக்கத்த கற்பனாசரித்திரங்களும் இன்னும் பல்வேறுவகைப்பட்ட துறைகளிற் கைதேர்ந்த சான்றோர் கூறிப்போந்த பலவேறுநூல்களிற் றிட்பமாயமைந்துகண்ட பலவரியவிஷயங்களும் மலிந்து பொலிந்து விளங்குதல், பத்திரிகைக்குரிய மேலாந்தரத்தைத் தெற்றெனப்புலப்படுத்துகின்றது.

அன்றியும், விஷயங்கள்யாவும், சொல்லணியும் பொருளணியும் இலக்கண வழுவின்மையும் யாவர்க்கும் இனிதுபுலப்படுந்தன்மையுமெய்தித் தண்ணென்றொழுகுஞ் செந்தமிழ்ப்பாஷாநதி கொண்டிருத்தலின் யாவர்மனத்தையுங் கொள்ளை கொள்ளாமற்போகா. இனி எவ்வாற்றானுந் தங்களிவ்வருஞ்செயலை யுற்றுநோக்குங்காற் படிப்பாரெழுதுவார்தொகைகுன்றிப் பரிபாலனசாத்தை குன்றிப் பலவகை இம்சைகளாற் பலவிகாரப்பட்டுப் பல்வகைச்சிறப்புங் குன்றித்தேய்ந்துபோகுந் தமிழ்மாது, சற்றே நற்றசைபடைவான் வேட்கை தலைப்பெற்றுக்கொண்ட தருமசெயலென்றே சாற்றக்கிடக்கின்றது. இவ்வரும்பெருஞ்செயலுக்காகத் தமிழுலகந் தங், கட்குப்பெரிதுங் கடப்பாடுடையதென்பதிற் சிறிதும்மயக்கமேயின்று.

பலர்புகழ் நல்லிசைப்புலவர்கள்பெருமானாகிய நந்தமிழ்க்குரவர்கோமான் யாழ்ப்பாணத்துச் சுன்னாகம் ஸ்ரீமத். அ. குமாரசுவாமிப்பிள்ளையவர்களை முதலாகக்கொண்ட சிறந்தவித்துவான்கள் தங்கள்பத்திரிகைக்கு விஷயதானஞ் செய்பவரா யிருத்தலின் அதனிடத்து எவ்வகைவனப்புமமைந்திருக்குமென்று ஓர்காற் புதிதாய்ச்சொல்லிக்காட்டவும் வேண்டுமா? இவ்வாறாகலின், ஞானப்பிரகாசத்தை யேற்று வாசிப்பவரிடத்து எவ்வகைமெய்ஞ்ஞானமும் பிரகாசிக்குமென்பது எனது மனப்பூர்வமான அபிப்பிராயம். இன்னோரன்னசிறப்புகள்வாய்ந்த தங்கள் பத்திரிகையை விரும்பிப் புகழ்ந்துகொண்டாடவேண்டியது, தங்களோடுகூட ஒரேசாலையில் ஆங்கிலேயகல்வியும் ஒரேகுருவிடத்திற் றமிழ்க்கல்வியும் பயின்றுள்ள எனக்கு முறைமையேயன்றோ! இத்தகையபத்திரிகை என்றுநின்று நிலவ எல்லாம்வல்ல பரமேஸ்வரக்கடவுள் அநுக்கிரகம் புரிவாராக.

இங்ஙனம்,

மயிலிட்டி,

க. மயில்வாகனம்பிள்ளை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞானப்பிரகாசம்.

"தொட்டனைத் தூறு மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத் தூறு மறிவு." திருக்குறள்.

சுவாமிப்புலவர் நூலக(ம்)
புலவகரகம்,
மயிலணி : : சுன்னாகம்,
இலங்கை.

மாதம் ஒருமுறை பிரசுரமாகும்.

புத்தகம்—உ. | யாழ்ப்பாணம்:—விரோதிகிருது௵ மாசி, பங்குனி௴. | இலக்கம்-எ, அ.

உ

கணபதி துணை.

மந்திரநான் மறையாகிவானவர்
சிந்தையுணின் றவர் தம்மையாள்வன
செந்தழலோம்பியசெம்மைவேதியர்க்
கந்தியுண் மந்திரமஞ்செழுத்துமே.

## தமிழ்த்தெய்வவணக்கம்.

மறைமுதற் கிளந்த வாயான்
மதிமுகிழ் முடித்த வேணி
யிறையவர் தம் பெயரை நாட்டி
யிலக்கணஞ் செய்யப் பெற்றே
யறைகடல் வரைப்பிற் பாடை
யனைத்தும்வென் றாரி யத்தோ
டுறழ்தரு தமிழ்த்தெய் வத்தை
யுண்ணினைந் தேத்தல் செய்வாம்.

## வித்தியா மகத்துவம்.

வித்தியாமகத்துவம் என்பது கல்வியின் பெருமையை விரித்துக் கூறும் நூல்கள் வடமொழியினுந் தென்மொழியினும் எத்தனையோ பலவாகி இருக்கின்றன. அவற்றுள் வடமொழியிலே "பர்த்திருகரி" என்னும் வித்துவரத்தினம் தமது நீதிசதகத்திலே கூறிய கல்வியின் பெருமையைக் கற்பவர்பொருட்டு இங்கே கூறுவாம்.

மாநாடுகளாலே தேடிக்கொள்ளற் பாலனவாகிய பொருள்களெல்லாவற்றுள்ளும் கல்விப்பொருளே அவசியம் தேடிக்கொள்ளற்பாலனவாகும். கைப்பொருள் கொடுத்தாவது கல்விப்பொருளைப் பெற்றுக்கொண்டால் மற்றையஎப்பொருளையும் எளிதிற் பெற்றுக்கொள்ளலாம். கல்விப்பொருளே நல்லுணர்வைக் கொடுக்கும்! புல்லுணர்வைக் கெடுக்கும்! புண்ணியத்தைக்கொடுக்கும்! பாவத்தைக்கெடுக்கும்! இன்பத்தைக் கொடுக்கும்! துன்பத்தைக் கெடுக்கும்! சிறப்பினைக்கொடுக்கும்! செல்வத்தினைக்கொடுக்கும்! அழகைக்கொடுக்கும்! அருளைக்கொடுக்கும்! நண்பினைக்கொடுக்கும்! பண்பினைக்கொடுக்கும்! உண்மையைக்கொடுக்கும்! உறுதியைக்கொடுக்கும்! பொறுமையைக்கொடுக்கும்! புகழைக்கொடுக்கும்!

கல்விப்பொருளோ கற்பகாலத்திலும் அழியாது! கொடுக்குந்தோறும் வளரும்! கல்விப்பொருளுடையார் எப்பொருளுமுடையராவர். இவ்வளவும் நீதிநூற்சாரமே என அறிக

இங்ஙனம்,
அ. குமாரசுவாமிப்பிள்ளை
சுன்னாகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்விகற்பிக்கும்முறை.

௭௨-ம் பக்கத்தொடர்பு.

உபாத்தியாயர்கள் ஒருவகைப்பயனுமின்றிப் பிள்ளைகளைக்கொண்டு நிகண்டுச்சொற்களை நெட்டுருப்பண்ணுவிக்கின்றார்கள் என்பதைக்கண்டு அவ்வாறுசெய்தல் தகாதெனவெண்ணியன்றோ "வடமொழி தென்மொழிக்கடனிலைகண்ட இந்தலம் புகழும்வித்துவசிரோமணி" யாகிய ஸ்ரீமாந். அ. குமாரசுவாமிப்புலவர் அவர்கள் தம்பயன் குறியாது மாணவர் பயனையே குறித்து அச்சொற்களை நியாயத்தோடு விளக்கிக்காட்டியிருக்கின்றனர்.

நாம் வண்டுக்கு அறுபதம் உண்டென்பதை நிகண்டுகற்கப் புகுந்தும் 2, 3, வருடங் கழிந்தபின் அறிகின்றோம். குருடனுக்குச் சூரியப் பிரகாசத்தைக் காட்டியவாறுபோலவே ஆசிரியர்களும் மாணவர்களுக்கு நிகண்டுமுதலாம்பாடங்களைப் படிப்பிக்கின்றனர். குருடன் சூரியப்பிரகாசத்தைப்பார்த்து அது இத்தன்மைத்தென அறிந்திருப்பதுபோலவே நாமும் நிகண்டுப்புத்தகத்தில் வண்டுக்கு அறுபதம் என்றும் யானைக்குத் தும்பி, தூங்கல் என்றும் பெயருண்டென்று படிக்கின்றோம். உபாத்தியாயர் வண்டின்பெயரை வினவும்பொழுது உடனே விடையிறுக்கத் தவறின், அறுபதமல்லவோ எனக்கூறி உபகாரமாகப் பிரப்பம்பழமும் கொடுப்பார்.

பார்த்தறிய அவாவும் பிள்ளைகள் நிகண்டிலே வண்டின்பெயரைத்தேடிப்பார்த்து அங்கே வண்டையேனும் அதன் ஒருபதத்தையேனும் அறுபதத்தையேனும் காணமாட்டார்கள். இவ்வாறே மற்றையசொற்களினறிவும் இருக்கும். இதனால் நிகண்டுகற்றலாகாதெனக் கூறவந்தவனல்லன். கற்றற்குரியார் தக்கமுறையாய்க் கற்றலவசியம். நிகண்டுகற்றற்காகக் கழிக்கும்பாலர்கள்' சிறுவர்களுடைய காலத்தை இயற்கைப்பொருட்களை அவதானிக்கும் வகையிற் கழிப்பித்தால் அவர்களுடைய மனோவிருத்தி மிகப்பெரிதாகும்.

பொருட்களின் பெயர்கள் யாவும் அவற்றின் உருவம்' குணம், தொழிலாதியனபற்றி வந்தனவாதலின் உபாத்தியாயர்கள் பிள்ளைகள் எளிதிற்பார்த்தறியக்கூடிய பொருட்களையாதல், அவற்றின் படங்களையாதல்காட்டி அவைகளின் குணம், உருவம், தொழில் என்பவைகளைப் பிள்ளைகளைக்கொண்டு அவதானிப்பித்து அவர்களைக்கொண்டே அவற்றிற்கியைய பெயர்களையும் இடுவிக்கலாமன்றோ. இவ்வாறுசெய்யுங்காலையில் பிள்ளைகள் எவ்வளவு ஆனந்தத்தோடு ஆலோசித்துத் தக்கபெயரை இடுதற்கு முயலுவர்.

நிகண்டிலே வண்டிற்கு அறுபதம் என்றசொல்லைப்படித்தவனு, வண்டைப்பார்த்து அதற்கு அறுபதம் உண்டென்பதை அறிந்தவனு, அறிவு மனோவிருத்தி என்பவைகளிற் சிறந்தவன் என்பதை உய்த்துணர்க.

பிறதேசங்களையும், சாதிகளையும், சமயங்களையும் அவரவர் கொள்கைகளையும் அவரவர் முயற்சிகளையும், சாதிசமயம் என்பவற்றை விருத்தி செய்வதற்காக அவர்கள் செய்யும் உபாயங்களையும் அறிதற்கேதுவாயுள்ளது பூமிசாஸ்திரக் கல்வியே. பிறசாதியார் தம்சாதிசமயங்களை விருத்திசெய்யும் உபாயங்களை நன்றாயறிந்தவனே தன் சாதி சமயம் என்பவற்றை விருத்திசெய்யத்தக்கவனுவான். அரசனையடைந்திடாரெனி னெவரெவராக்கமு மினிதாமாதலின் பிறரைப்பற்றி அறியாதவன் தன்னை எவ்வகையினும் எல்லாரினும் விசேஷமாக மதித்து மேன்மேலும் தன் சாதிசமயத்தை விருத்தியாக்கற்கேற்ற உபாயங்களை நாடாது அமைவன்.

அன்றியும் இருபொருளையாதல் இருகாரியங்களையாதல் ஒப்பிட்டுப்பார்த்தலன்றி ஒன்றைமாத்திரம் பார்த்து விசேடமெனமதித்தல் பேதைமை. ஆதலின் எவ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரும் தம் சாதி சமயங்களையேயன்றிப் பிற சாதி சமயம் என்பவைகளைப் பற்றியும் அறிதலவசியம்.

இது காறுங் கூறியவைகளால் கல்வித்தேர்ச்சி அறிவு என்பவற்றிற்கு நீதிநூல்கள் முதலாம் இலக்கியங்களுடன் வசன பாடம், பூமிசாஸ்திரம், இயற்கைப் பொருளவதான பாடம்; என்பன இன்றியமையாவென்றல் ஒருவாறு புலப்படும்.

வரும்.

இங்ஙனம்,

ஸ்ரீ. நா. சிதம்பரப்பிள்ளை,

உபாத்தியாயர்,

அரசினராசிரியகல்லூரி.

சீவகசிந்தாமணி

## சுரமஞ்சரியாரிலம்பகம்.

கவி. ௬௫.

தொடித்தோள்வளைநெகிழத்தொய்யின்முலைமேல்
வடிக்கேழ்மலர்நெடுங்கண்வார்புயலுங்காலும்
வார்புயலுங்காலவளைநெகிழநந்திறத்த
தார்வமுறுநெஞ்சமழுங்குவிக்குமாலே.

இச்செய்யுளிலே "வார்புயலுங் காலவளைநெகிழ" என்பது அச்சுப்பிரதியிலே "வார்புயலுங்காலும் வளைநெகிழும்" என மற்றொரு பாடமாயிற்று. இப்பாடம் "காலுதற்கு நெகிழ்தற்குக்காரணமாகிய" என்னும் உரையோடு இயைகின்றிலது. நமது ஆசிரியர் ஸ்ரீலஸ்ரீ. ஆறுமுகநாவலரவர்கள் மருகரும் மாணாக்கரும் வித்துவசிரோமணியுமாகிய ஸ்ரீ ந. ச. பொன்னம்பலம்பிள்ளையவர்கள் எழுதிய ஏட்டுப் பிரதியிலுங் காணப்படவில்லை

அல்லதூஉம் கசு ம் பாட்டுரையிலே "வலியாகவோர்தண்டையூன்றி" என்பது "வலியாகவுடையதோர் தண்டையூன்றி" என மற்றொன்றாயிற்று. உடையதோர் என்பதற்குச் செயப்படுபொருள் யாது? இங்கே "வலியாக" என்றது கஅ ம் கவியில் வரும் "தண்டுவலியாகநனிதாழ்ந்து" என்புழிநின்ற "வலியாக" என்பதனையன்றே! "வலியாக" என்பதற்குப் "பற்றுக்கோடாக"என்ற உரையையும் நோக்குக.

அதன்பின் "பெண்ணலத்தைக் காதலித்து அதனைப்பெறப்போதலில்" என்புழிப் "பெறப்போதலில்" என்பதும் "பெற்றேபோதலில்" என மற்றொன்றாயிற்று. போதற்கண் அதனைப் பெறுமையைப் பின்னர் நோக்கி அறிக.

கஉ ம் பாட்டுரையிலே "என்னுருவம் பளிங்கிலே தோன்றலிற் சிறிது பாடவமிக்குத் தோன்றும்" என்புழிப் "பாடவமிக்" என்பது "பாடமிக்கு" என மற்றொன்றாயிற்று. பாடவம்-வன்மை. பாடம் என்பதற்குப் பொருள் யாது?

கூ ம் பாட்டுரையிலே "தெருளாயாய்" என்பது "கேளாயாய்" என்று மற்றொன்றாயிற்று. முன்னுள்ள "தேற்றவும்" என்பதனை நோக்குக.

க0எ ம் பாட்டுரையிலே "வேறுகூறி" என்பதனுரையாகிய "தனித்துக்கூறி" என்பது "துணிந்துகூறி" என்று மற்றொன்றாயிற்று. வேறு என்பது துணிந்து என்னும் பொருளைத்தருமா? அது தனித்து என்னும் பொருடராலை "ஈட்டும் வேறுமாகி" என்புழி உரைநோக்கி அறிக. (கனக 185.)

இங்ஙனம்,

சிவ. இ. மாரிமுத்துஉபாத்தியாயர்.

வண்ணார்பண்ணை.

## ஆணவமலம்.

ஆணவம் மூன்று மலங்களுள் முதன்மையுடையது. ஆன்மாவுக்கு அறியாமையை யுண்டாக்கும் இவ்வாணவமலம் ஆன்மாவைப்பொருந்தியிருந்துசெய்யும் செயல்களிவையெனக் காட்டுகின்றோம்.

கழிந்தபிறப்பில் தானடைந்திருந்த சரீரம், தன்பெயர், ஊர், உற்றார், பெற்றார், மனை, மக்கள், செய்வினை, வாழ்வு முதலியனவற்றை இப்பிறப்பிலறியவொட்டாது. முன் தானுகர்ந்த சுவர்க்கநரகாநுபவங்களிவையென்றறியவிடாது வருஞ்சரீரமின்னதென்றறியாதுசெய்யும். முதல் தன்னைத்தானே யறியவிடாது. இது எங்ஙனமெனில்:-

பிறவிக்குருட்டினால் இவ்வுலகம் மறைக்கப்பட்டிருக்குமாறுபோலவும், கடல் நீரில் உப்புமறைந்திருக்குமாறுபோலவும், செம்பிற்களிம்பிருந்து அதன் பிரபை மறைந்திருக்குமாறுபோலவும், அரிசியிற் றவிடுமறைத்தலால் அதன்வெண்மை தோன்றாதிருக்குமாறுபோலவும் இதன் செய்தியுமென்னுணர்க.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறேயும், செய்தபாவபுண்ணியங்கள் இரண்டும் தராசின் நிறைபோலச் சமப்படுங்காலத்தில், ஆன்மாவுக்கு சிவபத்தியும் குருபத்தியும் உண்டாம். அஃதுண்டாகப் பிறப்பிறப்பினச்சமுண்டாம். அஃதுண்டாங்கால் ஆணவம் ஆன்மாவைச் சிறிதுவிட்டகலும் அகலவே சத்திநிபாதமுண்டாம்.

சத்திநிபாதமாவது பிரபஞ்சவெறுப்புண்டாக வீட்டின்மேலாசை யுண்டாதலாம். அப்பொழுது சிவபிரான் திருவருளே பரமாசாரியவடிவங்கொண்டெழுந்தருளும். அக்குருமூர்த்தவாயிலாக ஆணவமலம் முற்றுநீங்கும். எங்ஙனமெனில்:-

தெய்வவசத்தால் பிறவிக்குருடு நீங்க பிரபஞ்சம் வெளிப்பட்டாற்போலவும், கடலீருப்பு மேகமுகந்தவுடன் கழன்று பிரகாசிக்குமாறுபோலவும், தேய்த்துக்கழுவக்களிம்புநீங்கிச் செம்பு பிரகாசிக்குமாறுபோலவும், கழுவ அரிசியிற்றவிடுநீங்கி வெண்மைதந்தாற்போலவும், ஆசாரியசேவையாலும் பார்வையாலும், உபதேசத்தாலும் இம்மூலமலம் ஆன்மாவைவிட்டகலுமென்றறிக.

## கம்பர் கவிசாதுரியம்.

### ஆற்றுப்படலம்.

ஆசலம்புரிஐம்பொறிவாளியுங்
காசலம்புமுலையவர் கண்ணெனும்
பூசலம்புநெறியின்புறஞ்செலாக்
கோசலம்புனையாற்றணிகூறுவாம்.

இ—ள். ஆடவரைம்பொறிகளாகிய பாணங்களும், பெண்களின்கண்களாகிய பாணங்களும் நன்னெறிப்படும் கோசலநாட்டை அழகுசெய்யும் ஆற்றியல் கூறுவாமென்றுரைக்க.

முலையவர்கண்ணென விதந்தமையின், முன் ஐம்பொறி என்றது ஆடவரைம்பொறியை என்பது பெறுதும்.

ஆடவர்க்குப்போலவே, பெண்களுக்கும் நெறிப்படும் ஐம்பொறியுமுளவாக, அவரின் கண்ணொன்றையே விதந்து ஏனைநான்கையுமொழித்தமையே ஆசிரியர் காட்டிய சாதுரியமென்க. அஃதாமாறு!

ஆடவர்மெய், நெறியின் புறஞ்செலாமையாவது, தாம்வரைந்து கொண்டமெல்லியலார் மெய்யையன்றி ஏனைமகளிர்மெய்யினை மற்றொன்று கருதிப் பரிசியாமையாம். ஏனைநான்குபொறிகளுக்கு மிவ்வாறே கொள்க.

ஆடவர்களின் மெய் இங்ஙனம் நெறியின் புறஞ்செலாது நிற்ப, பெண்களுக்கு அங்ஙனந் திருப்பினும், இந்திரியமொழியினும் அவர்மெய் தாமேநெறியின்புறஞ் செல்லாதிருக்க வேண்டியதாய்முடிந்தது. முடியவே ஆடவர்மெய் நெறியின்புறஞ்செல்லாது நிற்பவே, மகளிர் மெய்யும் தானேநெறியின்புறஞ்செல்லாமை கண்டுகொள்க.

இவ்வாறே பெண்களின்கண்ணொழிந்த ஏனைநான்குபொறிகளுடன், தனித்தனி சார்த்தி நோக்கின், ஆடவரைம்பொறி நெறியின்புறஞ்செல்லாது நிற்ப, பெண்களின்கண்ணொழிந்த நான்குபொறிகளும் தாமே நெறியின்புறஞ்செல்லாது நிற்கும். ஆயின் மகளிர்கண்களோ அவ்வாறன்று. ஆடவர் கண்கள் நெறியின்புறஞ்செல்லாமையால் அல்வழிநோக்காதொழியினும் மகளிர்கண்கள் நோக்கவுங்கூடும். ஆதலால் மகளிர்கண்களை வேறெடுத்து விதந்தனர்.

இந்நுட்பம் நோக்கிப்பொருள்கொள்ளாக்கால், பெண்களதுகண்ணொழிந்த ஏனைநான்குபொறிகளும் நெறியின்புறஞ்செல்லுமியல்பின எனப் பொருள்பட்டு முரணுமாறுமறிக.

இனி "ஐம்பொறிவாளி" என்பதற்கு மன்மதபாணம் எனப்பொருள்கூறின் அவை நெறியின் புறஞ்செலாதாயின் முலையவர்கண்ணும் தாமே நெறியின்புறஞ்செல்லாது. பின் "கண்ணெனும் பூசலம்பு" என்பது மிகைப்படுதல் காண்க.

பால—மிதிலைக்காட்சி—603.

மாலுறவருதலுமனமுமெய்யுந்தன்
நூலுறுமருங்குல்போனுடங்கநோக்கினா[ன்
காலுறுகண்வழிபுகுந்தகாதனோய்
பாலுறுபிரையெனப்பரந்ததெங்குமே.

இங்கே காதனோய் புகுதற்குக் கண்ணையே வழி என்று கூறினமை யறிக.

(எழுச்சி—843)

"அமராஞ்சவணங்களையாருயிர்
கவருங்கூர்நுதிக்கண்ணெனுங்காலவேல்
குமரர்நெஞ்சுருவிப்பவழங்கலால்."
என்பது மீண்டுநோக்கற்பாலது.

உலாவி—1160.

மைக்கருங்கூந்தற்செவ்வாய்வாணுத
லொருத்தியுள்ளம், நெக்கனளுருகுகின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றுமெண்ணுஞ்சிடைவஞ்சன்வந்து, புக்கனன்
போகாவண்ணங்கண்ணெனும்புலங்கொள்
வாயும், சிக்கெனவடைத்தேன்றோழிசேரு
துமமளியென்றாள்.

இங்கேகண்ணைப்புலங்கொள்வாய் என்றதை
ஒப்பிடுக.

பெண்ணியலாரெல்லாருங்கண்ணிற்பொதுவுண்
ணனேனைன்பரத்தநின்மார்பு. (பரி

இத்திருக்குறளுமொருபுடையீண்டேற்பு
டைத்து.

யானேக்குங்காலைநிலனேக்குநோக்காக்காற்
றுனேக்கிமெல்லநகும்.

இதில் அவன்நோக்காதுவிடினு மவனோ
க்குதலுண்மையறிக.

(கிட்கி—ஆறு—35—செ—ள்.)

பெய்தவைம்பொறியும்பெருங்காமமும்
வைய்தவெஞ்சொலின்மங்கையர்வாட்கணி
னெய்தவைப்பெருவாளிபினெண்ணறச் [ன்
செத்தவம்பலசெய்குனர்தேவரால்

இதன்கருத்தான்றிநோக்கற்பாலது

"மடவார்கற்பும் காவலன் காவலன்றித்தங்கா"
என்பவாகலின், மகளிர் கற்புநெறிதவறுத் தலை
ப்படுத "மகிழ்ச்சியினுண்மை கூறுமுகத்தாற்
சூரியகுலத்தரசர்களது கோவியற்றருமவளர்ச்சி
யும் அதனுற் புயல்வளம்பொய்த்தலின்மையும் அத
னுலாற்றினிடையறுதொழுகு மொழுக்கும் கூறி
யவாறாயிற்று; ஆகவே எடுத்துக்கொண்ட ஆற்ற
ணிக்குவேண்டும் இடையறுதொழுகு மொழுக்கி
ற்காவன. காரணகாரியமுறைப்படி தோன்றவை
த்தவாறய்த்துணர்க.

கோணிலைதிரிந்துநாழிகுறைபடப்பகல்கண்மிஞ்சி
நீணிலமாரியின்றிவிளைவஃகிப்பசியுநீடிப், பூண்மு
லைமகளிர்பொற்பிற்கற்பழிந்தறங்கண்மாறி,யாவ
யிவ்வுலகுகோடாமரசுகோல்கோடினென்றான்.

என்னுமிதனுன்மேலனயாவுமறியலாகும்.

## கோரைப்பாய்.

இது யாழ்ப்பாணத்திலே, சிற்சிலவிடங்களி
ல் சிற்சிலரால் சிற்சில காலங்களில் மாத்திரம் த
ருவிக்கப்பட்டு விலைப்படுகின்றன இஃதன்றி
இதன் வரலாறொன்றையுமெம்மவரறியமாட்டார்
கள் ஆதலாலிதன் வரலாறுகளை எடுத்துக்காட்டு
கின்றோம்.

வடஆற்காடு ஜில்லாவிலும் வந்தவாசியிலும்
ஆம்பூரிலும் அதனைச் சூழ்ந்துள்ள இடங்களிலுந்
தான் இப்பாய்கள் மிகுதியாகப் பின்னப்படுகின்
றன.

இப்பாய்கள் கோரைப்புற்களாலும் கற்றாழ
ம் நார்களாலும் பின்னப்படுகின்றன.

கோரைப்பயிர் ஒரு எக்கர் நிலத்தில், நீர்ப்
பாய்ச்சலுக்கும் நிலத்தின் தன்மைக்குமியைய
250 ரூபா தொடக்கம் 400 ரூபா வரைக்கும் பெ
றுமதியாக வளர்ந்து பயன்தருகின்றது. இக்கோ
ரை 4 அல்லது நாலரை அடியுயரம் வளர்ந்துவரு
மளவில் அறுக்கப்பட்டு அவைகள் கூரிய கத்தி
யாற் கிழிக்கப்பட்டு வெய்யிலிலே நன்றாய்க்காயவி
ட்டுப் பின் கட்டி வைக்கப்படுகின்றன
இவற்றுள்சிலவற்றைப்பிளந்தவுடனெடுத்து மஞ்ச
ள் பச்சைசிகப்புச்சாயமிட்டு வைத்துக்கொள்ளுவர்.

பாய் பின்னுவோர், உயர்ந்தபாய்களை சன்ன
க்கோரையாலும் விலைகுறைந்தபாய்களைக் கனத்த
கோரைகளாலும் செய்கின்றார்கள்.

கற்றாழையை அறுத்துக்கட்டாகக் கட்டிச் சேற்றி
லிட்டு ஊறவைத்து பின் நார் எடுக்கப்படும்.

இப்பாய் பின்னுவது மிகலகுவான கைத்
தொழில். ஒருநாளிலேயே ஒருவன் கற்றுக்கொள்
ளலாம். இப்பாயின் தலைகட்டுவதைப் பழகிக்
கொள்ள ஒருவாரமாயினும் வேண்டும். சொக்கட்
டான் பாய்பின்னுதல்பழக, பழகியவனது மனப்
பூர்ணமான சகாயமதிகம் வேண்டும். ரகம்பாய்
பின்னப்பழக ஒருமாசம் வேண்டும். 6 அடிநீள
மும் 3 அடி அகலமுமுள்ள கனத்த கோரைப்பாய்
பின்ன 6 மணித்தியாலங்கள் வேண்டும். தலைகட்
ட ஒருமணித்தியாலஞ் செல்லும்.

இக்கால வெல்லையிலவன் ஸ்நானஞ்செய்து
சாப்பிட்டுங்கொள்ளுவன். இத்தொழிற்சாமர்த்தி
ய முள்ளவொருவன் காலை உதயம் தொடங்கி
அஸ்தமனத்திற்குள் 2 பாய்கள் பின்னிமுடிக்கின்
றான். சொக்கட்டான் பாயானுல் ஒரு நாளைக்கொ
ன்றுதான் பின்னக்கூடும்.

6 அடி நீளமும் 3அடி அகலமுமுள்ள கனத்தகோ
ரைப்பாய்க்கு.-

கோரை விலை—இரண்டரை அணு
கற்றாழைநார்—ஒன்றரை அணு
பின்னற்கூலி 3 அணு ஆக 7 அணுமுடியும்
இது 9 அணுத்தொடங்கி 12 அணுவரையும் விற்
கப்படுகின்றது. ஆகவே நூற்றிற்கு 30 முதல்
40 வரையுமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6 அடி நீளமும் 3 அரை அடி அகலமுமுள்ள சன்னக்கோரைப்பாய்க்கு. கோரை—விலை 3 அணா
நார் (இரட்டைத்தார்—2 அணா
கூலி—3 அரை அணா ஆக 8 அரை அணா
முடியும் இது 12 அணா முதல் 15 அணாவரையும் விலையாகும்.

6 அடி நீளமும் 4 அடி அகலமுமுள்ள சொக்கட்டான்பாய்க்கு கோரை—விலை 4 அணா
நார்—2 அணா
கூலி—6 அணா. ஆக 12 அணாவாகும்
இது ஒன்றேகால் ரூபாமுதல் ஒன்றரை ரூபாவரையும் விலையாகும். ஆகவே நூற்றுக்கு 60 முதல் 90 வரைக்கும் லாபமுண்டாம்.

இப்பாய்கள் மைசூரிலே பவரிங்கி பேட்டை, கோலார்முதலிய இடங்களில் நல்லாய் விலைப்படுகின்றன. இலங்கையில் மிகுதியாகத் தருவிப்பின் நல்ல வியாபாரமேயாம்.

பாய்பின்னுபவன் தனக்கு வேண்டும் கோரைகளையும் சற்றாழைகளையும் தானே பயிர் செய்து கொள்ளுகிறான். ஏக்கரொன்றில் விளையும் கோரை 3000. 4000 பாய்கள் பின்னப் போதும் எம்மூரெங்கும் பரவிக்கிடக்கும் சற்றாழை ஒரு பிரயோசனத்திற்குதவுகின்றிலதே. இப்பாய் செய்பவனிடத்தில், பாய்பின்னுங் கூலியாளன், கோரைகிழிக்க, காயப்போட, சாயமிடக் கூலியாளன் நார் எடுத்துத்திரிக்கும் கூலியாளன் என மூன்று வகைப்பட்ட கூலியாளரெப்பொழுது முடனிருத்தல் வேண்டும்

இதனை எம்மவர்கற்றுக் கொண்டு, அக்கோரைப்பயிரையும் பயிர் செய்து இவ்வியாபாரம் செய்யத் தொடங்கினால் மிகுந்த லாபங்கிடைக்கும் என்பதிற் சந்தேகமில்லை அன்றித்தேசத்திற்கும் பேரழகாக விருக்கும். பெற்றோர்கள் தம் பிள்ளைகளிற் சிலரை அனுப்பி இக்கைத்தொழிலைப் பழக்கிவைப்பது நன்மையோ, தீமையோ என்பதை எம்மூர்க் கல்விமான்களிடத்திற் கேட்டறிந்து கொள்வது கடமை.

---

## புலவர்பாற்சில அறியாவினுக்கள்

திருவாதவூரர்புராணம் மந்திரிச்சருக்கம்

(1) முக்கணொருநான்குபுயமைந்துமுகமுன்னோன், சொக்கனருணன்மைபெறுதொன்மைதிகழ்நன்னு, டக்கடுவிடத்தையரனுக்கருள்வதென்றே, மைக்கடலில்வைகலொழிவைகைவளநாடு.

இதிலே வைகைநதி கடலிலே சென்று வீழ்வதில்லை யென்பது கூறப்படுகின்றது.

மயூரகிரிபுராணம்

ஒவில்செல்வவேந்துமையுறமொருவன்பாற்செல்வ, மேவிலன்பினர்க்குதவியெஞ்சியதுண்டேல்வேந்தற், கிவதென்னவேவயல்குளக்கிந்துவிஞ்சியதேற், றுவிலாக்கடனீர்புகுந்தண்டுறைவைகை.

இதனால் வைகை கடலிலே சென்று வீழ்வதென்பது கூறப்படுகின்றது.

இவ்விரண்டனையுநோக்கி விளக்குக.

(2) "கைவிலைக்குக் கொளும்பாலசப்பால்வருங்காராக்கறந்தவெண்பால், காளான் முருங்கைசுரைகொம்மடி பழஞ்சோறு காந்திக்கரிந்தசோறு, செவ்வையில் சிறுக்கிரைபீர்க்கத்திவெள்ளுப்புதென்னை வெல்லமலாவகஞ், சிரிலாவெள்ளுள்ளி யீருள்ளி இங்குவொடுசிறப்பில் வெண்சுத்தரிக்காய், எவ்வமில் சிவன்கோயினிர் மாவிபங்கிரணமிலகு சுடரில்லாவுணிவையெலாஞ் சீலமுடையோர்களுக்காகா வெனப்பழைய நூலுரைசெயும்."

என்னுமிச்செய்யுளாலும் பிறநூல்களாலும் பெருங்காயம்விலக்கப்பட்டிருக்கின்றது. இயல்பினும் துர்நாற்றமுடைத்துமுள்ளது. ஆயினும் இது இந்தியாவில், அந்தணசிரேட்டர்களாலும் சைவாசாரமேற்கொண்ட சற்சூத்திரர்களாலும் பிறராலும் எல்லாவுணவுகளோடுஞ் சேர்க்கப்படுகின்றது. ஆலயங்களிலே ஈசுவரநிவேதனத் தோடும் கூட்டப்படுகின்றது. ஆகாதெனவிலக்கிய வித்துர்நாற்றப் பொருள் அநுட்டானத்தில் ஆசாரசீலர்களிடத்திலும் நிலைபெற்று நிற்பதென்னையோ?

இங்ஙனம்,

ஓர் மாணவகன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெண்கள்கல்வி.

சகோதரரத்தினங்களே!

இம்முறை எம்மவர் பிள்ளைவளர்க்கு முறைமையைச் சற்றுச்சொல்லுகின்றேன். சிறுபிள்ளைகளுக்கு எம்மவர்கள் கெட்டசிந்தனைகளை வருவிக்குந்தன்மைகளைக் காட்டுகின்றேன். முதல் பிள்ளைகளின் இரகசியத்தானங்களைக் கொஞ்சுவதாலும் அதனைப் பல்காற்றீண்டலாலும் ஒருவகையுணர்ச்சியினை அக்குழந்தைகளுக்குண்டாக்கிவிடுகின்றார்கள். இந்நிலைமையோடு சற்றுவளர்ந்தபின் அசப்பியவார்த்தைகளைத்தாம் வீட்டிலேபேசலாலும், அவைகளைக்குழந்தைகள் வாயாற்சொன்னால், மிகவின்பமென்றெண்ணிச் சும்பித்துக்கொடுத்து அவர்களைக்கொண்டு சொல்வித்தலாலும் வாயாற்பேசப்பழக்கிவிடுகின்றார்கள்.

அதன்பின், இவன் கருநிறமுடையவன் மாமன்மகளாயிருந்தாலும் என்பிள்ளைவிரும்பமாட்டான். அங்கேயுள்ள இன்னான்மகள் நல்லவடிவுடையள் செந்நிறமுடையாள் பொன்னிறமுடையள் அவளையே இவன் கலியாணஞ்செய்துகொள்ளுவான் என்றும பெண்பிள்ளைக்காயின, இவன்கரியவன் வடிவிலன் புயங்கள்பெருமையுடையவனல்லன். இவனே என் பத்தரைமாற்றுப் பொன்னுக்குமாப்பிள்ளை என்றும் பிள்ளைகளைச்சுட்டிக்கூறிக்கூறி நன்றாய்ப் படிமுறையாயழுத்திக் கொண்டுவருகிறார்கள். பின் பேசியதையெல்லாம் செய்துகாட்டுவார்போல, தமதுபிள்ளைகளுக்கு ஆண்பாவை, பெண்பாவைகளை வாங்கிக்கொடுத்து அவைகளுக்குக்கலியாணமென்றுசொல்லி, அப்பிள்ளைகளைக்கொண்டு கலியாணஞ்செய்வித்து இரண்டுபாவைகளையும் ஓரிடத்திற் படுக்கப்போடுவிக்கிறார்கள். இவ்வளவிலன்றி தம்படுக்கையறைக்குட்டானே குழந்தைகளையும் படுக்கவைப்பது மற்றொரு கெட்டவழக்கம். சிற்சிலவார்த்தைகளைப் பகலிலக்குழந்தைகள் கூறித்திரிவதாலிவ்வுண்மை விளங்கும்.

பின் என்பிள்ளைபத்துத் தாசிவைப்பான். இரண்டுகூத்திவைப்பான் ஒருத்தி வெற்றிலைமடித்துக்கொடுப்பாள். ஒருத்தி அதுசெய்வாள், ஒருத்தி இதுசெய்வாள் என்று செல்லங்கொஞ்சி அதற்குமப்பாலுள்ள ஞாபகங்களையெல்லாம் சிலகெட்ட நொடிகளால் வலியக்கொண்டுவந்து நுழைக்கின்றார்கள்.

இக்கல்விக்குப் பேராசிரியர்கள் அதிவிற்சிறந்த இப் பெண்மணிகளேயாம். இதனினும் நஞ்சூட்டுதல் மிகவும் நன்று. இன்னுமிதனை விரிப்பது நன்றன்றென்றுகருதி யிவ்வளவில் நிறுத்துகின்றேன். இந்தகையகல்வியை கற்பியாதுவிடுக்கும்படி கோடிநமஸ்காரஞ்செய்கின்றேன்.

தந்தையருள் இனிச்சிலர் மைந்தர்க்குச்செய்யும்பேருபகாரமாவன, இது வேண்டும் அது வேண்டுமென்றழுதவுடன், வறுமையினிலைமையை அவர்களுக்குப் புலப்படவிடாமல் உடனேவாங்கிக் கொடுக்கின்றார்கள். நாடகங்களுக்கும் பரத்தையர் அபிநயஞ்செய்து நடனமாடுமிடங்களுக்கும் கூட்டிக்கொண்டுபோகின்றார்கள். கலியாணவீடுகளுக்குக் கூட்டிக்கொண்டுபோயிருத்திக்கொண்டு, மணப்பெண்பிள்ளையைப்பார், இப்படித்தான் என்பிள்ளைக்கும். இவளினும் பதின்மடங்கதிகம் வடிவழகுள்ளவளை உனக்குச்செய்துவைப்பேன். ஊஞ்சலாடவைப்பேன் என்றற்றொடக்கத்துக் கதைகளை கேட்கக்கேட்க விரிவாகச்சொல்லியும் காட்டியும் ஈரமண்ணள்ளியப்பிள்ளையின் வாயினிறையப்போடுகிறார்கள்.

தாய்தந்தையர் இங்ஙனம் செய்வன அநந்தகோடி. இப்படிக் கண்டறியாதன காணக்காட்டுதலைக் கருதியோ, எம்மூதாட்டியார் "அன்னையும்பிதாவுமுன்னறி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெய்வம்" என்றது. இனியாயினுமித்துர் வழக்கத்தைவிட்டு, பெரியோர்கள் சரித்திரம், தெய்வபக்தியைத்தரும் கதைகள் சாந்தம் பொறுமைமுதலியகுணங்கள்வளர்தற்குரியநல்லபாடங்கள் கல்வியைவிடாதுகற்கு ஊக்கம் வருதற்கேற்றனஎன்பனபோல்வனவற்றைக் கூறி, இயற்கையற்புதங்களைக்காட்டி இவைகளைப்படைத்தவனொருவனுளனென்ன ஆத்திகமத ஞாபகம்வேரூன்றச்செய்தும்கோவில்களுக்கழைத்துச் சென்றுசிவநாமஞ்சொல்லவிட்டும் அங்கே நடந்துகொள்ளவேண்டிய கடமைகளையெடுத்துச்சொல்லியும் செல்லங்கொஞ்சுதல் மிக்கநன்மைதருமென்பது எமது துணிபு.

இங்ஙனம்,
S. ஞானம்பிகை.
கொழும்பு.

# அன்னபூரணி

## இனியகதை.

### (முதலாம் அதிகாரம்)

சீர்பூத்தகருவிஞூ னுணர்ச்சிதேங்கச்
சிவம்பூத்தநிகமாகமங்களோங்கப்
பார்பூத்தபுறச்சமயவிருள்கணீங்கப்
பரம்பூத்தசைவநிலைபாரோர்தாங்கப்
பேர்பூத்தசிவானந்தத்தினிது தூங்கப்
பிறைபூத்தசடைமௌலிப்பிரானார்தந்த
வார்பூத்தவறிவிச்சைதொழிலென்றோதும்
மதம்பூத்தவிநாயகன்றாள்வணங்கிவாழ்
(வாம்.

நமது குலதெய்வமாகிய குன்றமெறிந்த குமரநாயகரின் திருவருளைமுன்னிட்டு நாம்கூறும் இச்சரித்திரமானது மகிமாவதியாகிய விக்டோரியா மகாராணியாரின் ஆளுகைகாலத்து நடைபெறுகின்றது.

இலங்காதீபகத்தின் வடபாகமாயுள்ளது யாழ்ப்பாணநாடு. இயற்கையிலே மாதம்மும்மாரி தவறாது வருஷித்தலினாற் பலவகை வளங்களிலும் மேம்பட்டது இந்நாடேயாகும். இந்நாட்டினரின் கடவுட்பக்தியினாலும் விடாமுயற்சியினாலும் சகலஐஸ்வரியங்களும் பொருந்தியிருக்கின்றன. வண்ணை. விசுவலிங்க வைத்தீஸ்பர சுவாமி கோயில் தமிழரசர் காலத்து அமைந்துள்ள நல்லைச் சட்டநாதசுவாமிகோயில் கீரிமலை, நகுலேஸ்பரசுவாமிகோயில் முதலியபல சிவாலயங்களும், அமைச்சர்திலகராகிய புவனேகவாகு என்பவராற் கட்டிப் பிரதிட்டைசெய்விக்கப்பட்ட நல்லைச், சுப்பிரமணியப் பெருமானார் ஆலயம் ஆதிகாலத்திற் கோயிற்கடவையென்னும் பெயரோடிருந்து பின் இராசசெல்வியாகிய மாருதப்பிரவல்லியினாற்ருபித்துப் பிரதிட்டைசெய்விக்கப் பட்ட மாவைச்சுப்பிரமணியப் பெருமானார் ஆலயம்முதலிய குகாலயங்களும். வேம்படிவிநாயகர் பன்றிக்கோட்டு விக்கினேஸ்வரர்முதலியஆலயங்களும். பலதிராவிடஆங்கில கலாசாலைகளும் வர்த்தகசாலைகளும், புத்தகசாலைகளும், பற்பலதேயங்கடோறும் நிகழும் விசேஷசம்பவங்களையும் அஞ்ஞானவிருளை நீக்கி மெஞ்ஞானப்பிரகாசத்தைக் கொடுக்கும் பற்பலவியாசங்களைத் தம்முளடக்கி வெளிவரும் பத்திரிகைசாலைகளும், இந்நாட்டிலே அமைந்திருக்கின்றன இந்நாட்டில் வசிப்பவர்கள் செங்கதிர்ப்பரிதியோயாச் செழுஞ்சுடரெறிக்குமேலாந்துங்கமும் சிறப்பும்வாய்ந்த துகளறும் பிறிஷ்டின் இராக்கினியாகிய விக்டோரிய மகாராணியாரின் குடிசனங்களேயாம். கைம்மாறுகருதாது இவ்வம்மையார் செம்மையாய் அன்போடுஆண்டுவருகின்றனர் அருமையும் பெருமும் வாய்ந்த இவ்வம்மையார் மீது கொண்டராசவிசுவாசத்தினால் அவரின்பிரதிமைப் படத்தைக் குடிகள் ஒவ்வொருவரும் தத்தம் இல்லங்கடோறும் வைத்து நேத்திராந்தமுறுவார்களேயாயின் இவர்களின் இராசவிசுவாசப் பாங்கை இத்துணைத்தென்று எம்மாற்கூறமுடியுமோ முடியா! முடியா!! இராணிநாயகியாரின் குடிசனங்களில் ஆடவர்கள் உயரமும் பலமும்பொருந்தியதேகத்தினராய் அழகில் மன்மதனைப்போன்று அடக்கம் வாய்மை பொறைமுதலியசற்குணங்களில் மேம்பாடுடையர்களாய் இருப்பார்கள். பெண்களோ அழகும் கற்பும் ஒருங்கேதிரண்டு ரம்பாஸ்திரிகள் போலிருப்பார்கள். நாம் இங்கேகூறிய குணங்களுக்கு முற்றும் மாறுபாடானவர்களும் உண்டு. இவர்கள் இல்லாவிட்டால் நம்போன்றவர்கள் சரித்திரம் எழுதுவதுஎப்படி. இந்நாட்டிலுள்ள பலவகைத்தெருக்கள் கூடும் இடங்களிலே உள்ளசிறிய இனியதோட்டங்களின் காட்சி வெகு மாட்சியாயிருக்கும். கோயில்கடோறும் விதிவழுவாது விழாக்கள்நடைபெறும். சிலஆலயங்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களில் கேட்பார் இல்லாமையினால் வேதசிவாகமத்திற்கு மாறாக மனம்போனவாறு நித்திக நைமித்திக விழாவணிகள் நடைபெறுகின்றன. பிராமணசிரேட்டர்களின் இல்லங்கடோறும் வேதவொலிவிம்மும். கலிகாலமகிமையினாலோ அறியேம் சில அந்தணசிகாமணிகள் தங்களுக்குரிய அறுதொழில்களை விடுத்து மூன்றாஞ்சாதியாரின் ஒழுக்கங்களைப் பின்பற்றித் தங்கள்சாதிக்கோர் அபவாதத்தை உண்டாக்கிவிடுகின்றார்கள். மருதநிலங்கடோறும் விதைப்பொலிகேட்கும். அழகிய இந்நாட்டிலே தரித்திரமென்பதே கிடைக்காது. நெற்பயிர்கள் கரும்புபோலத்தழைத்து அபரிமிதமான பலனைக் கொடுத்தலினால் இந்நாட்டினர் முப்போகத்தைவெறுத்து ஒருபோகமாக்கிக்கொண்டார்கள். வரம்புகடோறும் பலவகைக்காய்வர்க்கங்கள் செழிக்கும் சோலைகள் தோறும் கனிகள் தொங்கும். இந்நாட்டைப்போலப் பல்வகைச்சிறப்புக்களிலும் மேம்பட்டநாடு வேறில்லையென்று துணிந்து கூறலாம். பலவிதவர்ணங்களையுடைய புஷ்பங்கள் பூஞ்சோலைகடோறும் பூத்து ஆகாயமெல்லாம் பரிமளிக்கச்செய்யும். சுற்றிலுமுள்ள தோட்டங்களில் நவரத்தினங்களே தொங்கியவைபோலவும் மாவும், வாழையும், மாதுளமும், எலுமிச்சையும் பழுத்துப்பிரகாசிக்கும். உய்யானவனங்களில் மயில் குயில் முதலிய பலவகைப்பட்சிசாலங்கள் மயங்கிப்பாடும். முத்தமிழின்பொலிவும் ஆங்கிலபாஷாவிற் பன்னர்களான பண்டிதர்களதும் உத்தியோகத்தினர்களது பெருக்கமும் இந்நாடெங்கும் பரவியிருக்கும்.

இத்துணை மகிமையும் பெருமையும் அமைந்துள்ளதாகிய யாழ்ப்பாணநாட்டைச் சார்ந்த புத்தூரென்னுங் கிராமத்தில் அருணாசலம்பிள்ளை என்னும் ஒருவருளர். இவரின் முன்னோராகிய இரண்டாம்சந்ததியார் இந்தியாவைச் சேர்ந்த காஞ்சீபுரத்திலிருந்து இங்குவந்து குடியேறியவர்கள். இவரின் இல்லாள் மங்கையர்க் கரசியென்னும் பெயரினள். பரமகருணாநிதியின் திருவருளினால் இவர்கள் ஐந்துபிள்ளைகளுக்கு இருமுதுகுரவராயினார்கள். முதற்குமாரனுக்கு நமசிவாயமென்றும் இரண்டாங்குமாரிக்கு அன்னம்மாளென்றும் மூன்றாங்குமாரனுக்குக் குமாரசுவாமியென்றும் நாலாங்குமாரிக்குச் சின்னம்மாளென்றும் ஐந்தாங்குமாரிக்கு வள்ளிநாயகியென்றும் நாமகரணஞ்செய்யப்பட்டது. மங்கையர்க்கரசியானவள் நாயகரின் கைத்தொழிலாகிய வஸ்திரநெசவினால்வரும் அற்ப ஊதியத்திற்கேற்பச் செட்டாகக் குடித்தனம் நடத்திவந்தாள். இவள் தனது மூத்த இருபிள்ளைகளுக்கும் கல்விகற்பிப்பதற்குப் போதிய வருவாயில்லாமையினாலும் அதற்காகப் பிறருதவியைவிரும்புவது பிரியமில்லாமையினாலும் நாயகனுக்கும் பிள்ளைகளுக்கும் குடித்தனவிஷயமாகச்செய்யும் பணிவிடைக்காலம்போகஒழிந்தநேரங்களில் அவர்களுக்குத் தானாகவே கல்விபுகட்டிவந்தனள். இவள்வறுமைக்குத்தக்க தானசிறிய வீட்டைப் புனிதமாக்கி அதற்குபகரணமான பொருள்பண்டங்களைக் காண்போர்கண்ணைக் கவரத்தக்கதாகவே அலங்கரித்து வைத்திருப்பாள். அருணாசலம்பிள்ளை நாயகியின் நற்குண நற்செய்கைகளின் விசிட்டத்தினாலும் பிள்ளைச்செல்வச் சிறப்பினாலும் யாதொருகுறைவுமின்றிச்சந்தோஷமாகவே சீவியத்தைநடத்திவந்தனர். சென்றஜென்மத்தில் விட்டகுறைதொட்டகுறையினாலும் செய்துகொண்ட புண்ணியத்தின் பெறுபேற்றினாலும் நற்குண நற்செய்கைகள் அமைந்தநாயகியைப் பெற்றுக்கொண்ட ஒருவனுக்கு ஒருகுறைவும் வரமாட்டாது.

ஒருநாள் அருணாசலம்பிள்ளை அவ்வூரில் நெசவுசாலைவைத்து நடத்தும் சுப்பிரமணியபிள்ளை என்பவருடைய வீட்டிற்கு வழக்கம்போலச் சென்றுவிட்டனர். மனைவியாகிய மங்கையர்க்கரசி வீட்டுவேலைகளை முடித்துவிட்டுப் பகல் பன்னிரண்டுமணி நேரமளவில் பதினாறு வயசுடைய மூத்தகுமாரனுக்கும் பதினொன்று வயசுள்ளவளும் நம் கதாநாயகியுமாகிய அன்னம்மாளுக்கும் கல்விகற்பித்துக் கொண்டிருந்தனள். மற்றை மூன்றுபிள்ளைகளும் சிறுவர்களாகையினால் நித்திரையாயிருந்தனர். அப்பொழுது அவ்வீட்டில் முற்பக்கத்திலுள்ள வராந்தாவிலுள்ள சாளரவாயிலில், புருஷசாமுத்திரிகாலக்ஷணத்திற் கூறப்பட்ட வடிவலங்காரமமைந்த ஒரு ஆடவன் வந்து வீட்டெசமானியாகிய மங்கையர்க்கரசியைப்பார்த்து ஒருவிதமான சைக்கினைசெய்து திரும்ப அவள் பிள்ளைகளே இருந்துபடியுங்கள் இதோவந்துவிட்டேன் என்று கூறி வெளியேவந்து கபாடபந்தனஞ்செய்து எவ்விடத்துக்கோ சென்றுவிட்டனள்.

வரும்

இங்ஙனம்,

மா. சிவராமலிங்கம்பிள்ளை,
ஆறுமுகநாவலர்வாசிகசாலை,
வண்ணார்பண்ணை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கல்வியும் செல்வமும்.

சமுத்திரஞ்சூழ்ந்தவிவ் வுலகின்கண்ணே, வசிக்கும், மனிதர்களாலே, தேடற்பாலனவாகிய, பொருள். கல்விப்பொருள், செலவப்பொருள் என இரண்டேயாம். இவ்விரண்டனுள் கல்விப்பொருளாவது. எக்காலத்திலும், அழிவற்றதாயும், யாவர்க்கும், இன்றியமையாததாயும், எவ்வகையினோர்க்கும், எத்துணைப்பெருஞ்சிறப்புவாய்ந்த நல்லறிவுச்சுடர்கொழுத்துவதாயும், யாவர்க்கும் எவ்விடத்தும் தற்சமயங்களிலே உதவிபுரிவதாயும், யாவராலும் மிக்கவிருப்பத்தோடுவந்தேற்றுக்கொள்ளப்படுவதாயும் (கற்கைநன்றே கற்கைநன்றே பிச்சைபுகினும் கற்கைநன்றே) என்னுமான்றோர் வாக்கியத்துக்கிசைவுபொருந்த கற்கவேணு மென்னுமிவ் விருப்பத்தை யாரிடத்தும் வளரச்செய்வதாயும், எத்துணைச்சிறப்புவாய்ந்த புலவர், பண்டிதர், சாஸ்திரிகண்முதலியோராலும், கரைகாணுதற்கரும் பெருஞ்சமுத்திரமாயும், ஆன்மலாபத்திற்குரியதாயும், இன்னுமிவைபோல்வன பிறவற்றையுந் தம்முளடக்கியதாயுமுள்ளவோர் பெருஞ்செல்வமேயாம்.

இங்கே கல்வியென்றது. தமிழ், இங்கிலீஸ், சமஸ்க்கிருதம், தெலுங்கு, சிங்களம் முதலிய எல்லாப்பாஷைகட்கும், பலவகையான வித்தைகட்கும் பொதுவாயுள்ளது. இதனை எளிதிற்கற்பதும், பயன்முதலியவற்றைப் பெறுவதும் அரிதாகும். எவ்வகைப்பட்ட எச்சமயிகளாயிருப்பினும், தத்தஞ்சமயங்களுக்கேற்பத் தங்களூர்களிலாவது வேறிடங்களிலாவது உள்ள பாடசாலைகளிலே பிள்ளைகளையனுப்பிக் கிரமந்தவறாது கற்பித்துவரின் உத்தமம் என்பது யாவருமறிந்த விஷயமேயாம் சிலர் கல்வியறிவிற் றேர்ச்சியின்மையாலும், பிறந்தவுடன் பொருள் சம்பாதிப்பதற்கேதுவான முயற்சிகளைப் பயிற்றுவதாலும், தங்கள்பிள்ளைகளைக்கலாசாலைகட்கு அனுப்பாமலும் வேறு உபாத்தியாயர்களிடத்திலாவது அனுப்பிக்கற்பியாமலும் அச்சிறுவர்களின் வாணாளை வீணாளாக்குகின்றனர். இதனால் பிதாமாதாக்களின் பிற்காலத்தில் பிள்ளைகள் பெரும் நஷ்டத்தையும சஷ்டத்தையும் துன்பத்தையுமடைகிறார்கள் இதனாலன்றோ உள்ளதொழியவொருவர் சுகங்கொள்ளக்கிடையா குவலத்தில் வெள்ளக்கடலோடி மீண்டுகரையேறினுலென்னுடலோடுவாழுமுயிர்க்கு என்பதாக. ஔவையாரும் அருளிச்செய்திருக்கின்றனர். ஆதலால் அவர்கள் கல்வியின் அருமைபெருமைகளையறிந்திருப்பார்களேயானல் ஒருகாலத்தும் இப்படிச் செய்யமாட்டார்கள்.

இங்ஙனம்,
S. K.

## இராக்ஷசகாவியம்.

### முகவுரை

இச்சிறுகாவியம் வடமொழியிலே மகாகவிச் சிரேட்டராகியகாளிதாசகவியால் நவரசசம்பந்தமாகவிபற்றப்பட்டது. அதில் இருபது சுலோகங்களுள்ளன. அவை சிறுவர்களின் விவேகவிருத்திக்கேற்றன. பாஷாநடையை நன்குவிளக்குவன. கவிசாதுரியமமையப்பெற்றன. ஆதலினதன் மொழிப்புரையைப் பத்திரிகை வாயிலாகவுணர்த்தல் பயன்படுமெனக்கண்டாம் அன்றியுமறிவின் வளர்ச்சியடைய விரும்பினோர்க்குதவியாகமூலபாடத்தோடு, பதச்சேதம் அன்னுவயம் ஆகாம்க்ஷை, பதம், பதார்த்தமிவைகளுஞ் சேர்த்து ஓர்சிறுபுத்தகமாகப்பின்னர்வெளிப்படுத்துவாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முதலாஞ்சுலோகம்.

உலகவிவகாரங் காரணமாகக் கடமை பூண்டொழுகுமாற்றலையுடைய வோரரசிளங்குமரன்; ஓர் நாள் தடாகங்கணிறைந் தவனங்கடோறும் (வினவயத்தான்) அலைந்து வரும்போது, ஆகாயத்திலுண்டாம்மேகத்துளிகளினனைந்த சந்திரனுக்கொப்பான வதனமுள்ள வோர் வாலஸ்திரீயைக் கண்டு சந்தோஷமுடையவனாய், மிருந்த நன்மைகளைக்கொடுக்குமின்மொழிகளைப் பின்வருமாறுரைப்பானாயினான் - எனவே அலைந்துவருந்தியவோர்வாலிபன் றடாகத்திலுமுகம்கழுவிநின்ற வாலைப்பருவத்தையுடையாளோடுரைத்தனனென வோதினமையின், இவற்றின்றொடர்பையும் விடயக் கருத்தையு மூகித்துணர்க. (௧)

தாமரைப்புட்பத்திற்குச்சமானமுள்ள வதனமுடையபெண்ணே!! இந்தடாகத்தின்கணிறைந்த தாமரைப் புட்பங்களையும் ஆகாயத்தினிறைந்துள்ள முகில்களைக்கண்டு நடிக்குமயில்களையும், (அவைகணடித்தவிறனும் புட்பங்கணிறைந்தலர்ந்திருத்தவிறனும் விளங்குகின்ற) இச்சோலையையும் பாரெனறனன். (௨)

வரும்.

இங்ஙனம்,

S. P. K. சண்முகஐயர்

வனிதாரத்தினமென்னுஞ்

## சாந்திகதை.

அகூ-ம் பக்கத்தொடர்பு.

ஆங்கது கேட்ட நல்லோன்தேவரீர் எம்மாடுப்புகன்றவையாவும் கரதலாமலகமென விளங்குதாம். என்பிராணபதமான தலைவரே! அநித்தியமென்பது காலத்திரயத்தினு மில்லவே யில்லையென்பது வெள்ளிடைமலைபோலத் தெரிந்திருந்தும் தெப்பத்தைக் கொண்டு கடலைக்கடவாமல் வெறுங்கையினால் கருங்கடலை நீந்துவேனென நினைந்துணிவது போலிருக்கின்றது உமது கருத்து. அது என்ன பிரயோஜனத்தைக் கொடுக்கும். அது நிட்பிரயோஜனமாச்சுதே. பூலோகமு மதையாளும் அரசர்களும் அவரது செல்வங்களுக் நுட்பயினமணுக் கொப்பாகும் தெய்வலோகமும் அதற்கரசராகிய தேவேந்திரர்களும் அவரது செல்வங்களும் ஆகாயத்தினுடுக்களை யொத்திருக்கும். எண்ணிக்கையுள்ள சகங்களும் பிரமர்களும் அண்டங்களும் சிவகோடிகளும் நசித்ததளவில்லையே. ஆனதால் சகடக்கால்போல உயர்ந்தும் தாழ்ந்தும் நிலையின்றிவருவதாதலால் துன்பத்திற்கே ஏதுவாயிருக்கின்றன. திருக்குறள். "கூத்தாட்டவைக்குழாத் தற்றே பெருஞ்செல்வம், போக்குமதுவிளிந்தற்று." என்றும் ஞானவாசிட்டம். மண்ணுடுமன்னவரு மவர்தனமுமாண்டனை நுண்மணலையொக்கும், விண்ணுடி மிந்திரரு மவர்வாழ்வும் போயின விண்மீனையொக்குமெண்ணுடும் பிரமருமண்டபமும் பூதங்களு மிறந்தவெல்லையில்லை, நண்ணுடுமைவையெங்கே நினவாழ்க்கை நிலையென்னே நவிலுநெஞ்சே" என்னும் பெரியோர்வாக்கியமிருத்தலால் உமது பணிக்கிசைந்திலேம் நீர் புகவிரும்பும் வழியெதுவோ அவ்வழிமேற்கொள எமக்குடன்பாடேயன்றிபிறிதொன்றிலேனுஞ் செல்கின்றிலேனெனச் சாந்தியானவள் கூறினள்.

அஃதுணர்ந்த மதியூகியாகிய மன்னவன் கற்புக்கரசாகிய சாந்தியைநோக்கி கற்பினுங் குணத்திலும் விசேடித்த சிரோரத்தினமே நும்மாட்டுக்கொண்டிருக்கும் விஷயமோ மிக்க இலகுவென்றெண்ணவேண்டாம். அதுமெத்தப்பாரியவிஷயமாகும் அது யாராலுமெளிதிற்பெறத்தக்கதன்று ஸ்ரீ சற்குருசந்நிதானத்தில் பன்னிரண்டாண்டு குருபணி செய்தவர்க்கே கிடைத்தற்பாலவாயிருக்குமென்பது ஆன்றோர் துணிபு. ஆதலால் நீ புகல்வதைப்பார்க்க உற்பாதமாகவிருக்கின்றது. நும்போல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாரடைவது அருமையினு மருமையேயாம். அதுவெகுபிரயாசையால் கொள்ளற்பாலனவாயிருக்கின்றன. அதில் நம் கருத்தைச்செலுத்தாது பொருட்செல்வத்திலே பற்றிநிற்பது நன்றென விளங்குகின்றது என்றனர்.

சிறிதேனும் வழுவின்றிக்கேட்ட சாந்தியானவள் மன்னர்க்கரசனைப் பார்த்துச் சொல்லத்தொடங்கினாள். என தாத்மநாயகராகிய மன்னனே கன்னிகையான நங்கையைக் காமக்கலவிக்கழைத்தால் கருதுவளோ அதில் அவளுக்கு யெவ்வளவு வெறுப்புநிகழுமோ அதுபோல் நீர்சொல்லிய விஷயத்தில் வெறுப்பே நிகழ்ந்து கொண்டிருக்கின்றது. நீர்செல்லும்வழியில் யாவர்கள் செல்லத்துணிவது அருமையினுமருமையேயாயினும் சிகித்துவசன் மனைவி சுடாலை முதலியோர் நித்தியசுகப் பிராபத்தியாகிய பிர்மானந்தவாழ்வை யடையவில்லையா அடைவதாயின் யாம்பெறுதற்கிடையூறுளதோ அதனை உரைத்தருள வேண்டுமென விண்ணப்பஞ்செய்தாள்.

அதுகேட்டதலைவர் இதனைச்சொல்வதாயினர் எனது மனதுக்கிசைந்த மதிவாணுதலீர் நீ புகன்றவண்ணம் அடைவதாயின் சிரத்தா பக்தியாகிய விசாரம் வேண்டும் விசாரமோ ஆத்தும னாத்துமாக்களை வேறுபிரித்தறிவதாம். இந்தவிசாரம், ஈஸ்வரன் வேதம் குரு தனதந்தக்கரணமாதிய விந்நான்கின் கிருபையாலுண்டாம். இதற்கு ஏது சுத்தமாயை அசுத்தமாயை யென்று சொல்லப்பட்ட இருவகை மாயையின்கணுள்ள போகங்களினிச்சை யில்லாமலும் அன்னிய சாத்திரங்களிற் சொல்லியிருக்கிற விதிவிலக்குகளிலே பயமில்லாமலும் பிரபலசுருதி அற்பசுருதி யாதிகளிற்சொல்லப்பட்ட அநுட்டானங்களி லெதைவிடுவோம் எதைப் பற்றுவோமென்கிற சங்கையில்லாமலும் யானெனதென்னுங் கர்த்தத்துவ போக்தத்துவ மில்லாமலும் சர்வான்மாக்களுக்கும் பயத்தை அல்லது துக்கத்தை வருவிக்காமலும்; ஆணவாதி பஞ்சமலங்களைவிட்டு நிவர்த்தையை நுகர்வது தயை பொறுமை சாந்தியாதியகுணங்கள் அவசியமிருக்கவேண்டும் இத்தியாதிவிஷயமுடையவர்களுக்கே துக்கநிவர்த்தியாகிய பரமானந்த பிராபந்திநிலைவரும், இதனை அநுட்டியாதவர்களுக்கு ஐக்கியநிலைகிடைக்கமாட்டாது ஆதலாலஃதை யடையக்கருதினவர்களுக்கு பத்தி வைராக்கியம் ஞானமிருக்கவேண்டும் ஆனதால் உனதெண்ணத்தைத் தெரிவிக்கக்கடவாயென்றனர்.

இங்ஙனம்,

மு. குருசாமிப்பிள்ளை.

---

## பழிவாங்குதல்.

அஅ-ம் பக்கத்தொடர்பு.

அப்பொழுது அவள் என் பிராணநேசமே! தாம் முன் சந்தேகப்பட்டாலும் இனிமேல் அப்படி எண்ணவேண்டாம் ஆனால் கடவுளால் எங்களுக்குண்டாகிய நேசம் இன்பமாக இருந்தாலும் அதை மட்டுமல்ல நாங்கள் எங்களுடைய கடமைகளையும் முறைமையையும் நன்குசிந்தித்தல் வேண்டும். எனது தந்தையாரென்னை உமது தமயனுருக்கு மன்றல் முடித்துக்கொடுத்தல்வேண்டுமென்னும் எண்ணமுடையவராயிருக்கின்றார் என்றீர் அவருடையவிருப்பம் என்னுடையதல்லவே நான் அவருடையவிருப்பத்திற்குக் கட்டுப்படுதல் அவசியமேயாயினும் ஒருபெண்ணை அவளுக்குவிருப்பமில்லாத ஒருவனை விவாகஞ்செயதுகொடுக்க அவளின் தாய் தந்தை சுற்றத்தாராதியோர் தெண்டிப்பதும் பாடுபடுவதும் மனச்சான்றுக்கு விரோதமல்லவா? ஆகையினால் என்னுடைய விசுவாசநேசத்தை நானகவெளியிட மாட்டேன் எனலும் தோம் கண்மணி!! அதற்கென்னதடை அப்படியே செய்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாய் சுடலைபோகும் வரைக்கும் நான் உன்னைக் கைவிடவில்லை. நான் மீண்டும் கேட்கின்றேன் இல்லறமாகிய சகடத்தை நாமிருவரும் இழுக்க இன்னும் சிலகாலம் செல்லுதல் வேண்டும் தெய்வீகமாய் இடையில் எனதுசீவியஓட்டத்தின் முடிவு வரச் சம்பவித்தால் அதை நீ அறியும்வரைக்கும் வேறொருவரை மணம்புரியக்கூடாது இதுவே எனது தாழ்மையான கோரிக்கை என்றான். அப்பொழுது அவள் மந்தகாசஞ்செய்து ஐயா! இன்னும் காலம் எவ்வளவோ இருக்கின்றது அதற்கிடையில் எத்தனையோ மாறுபாடுகள் உண்டாகுமோ தெரியாது அங்ஙனமாயினும் நான் தங்கள்மீதுகொண்ட இடையறாக் காதல் மாறுபடமாட்டாது இது திண்ணம் என்றனள். இவ்விதம் இவர்கள் சம்பாஷித்துக்கொண்டு சிறிதுதூரம் செல்லும்போது தோம் அவளைவிட்டுப்பிரிய மனமில்லாதவனாயிருந்தாலும் காலகரணத்தையுத்தேசித்து அவ்விடம்விட்டு நீங்க வில்லியிடம் உத்தரவுபெற்று அவளைமீட்டுங்கட்டித் தழுவிமுத்தமிட்டுத் திரும்பும்போது வில்லியின் பிதா உக்கிரகோபத்தோடு நிற்பதைக்கண்டான் வில்லியும் அவனைக்கண்டு திடுக்கிட்டு ஸ்தம்பித்து மரம்போலநின்றாள்.

வில்லியின்பிதா: துஷ்டவாலிபனே! உனக்கு எனது மகளுடன் என்ன அலுவல் என்னுடைய இந்த உய்யானவனத்தில் யாருடைய அனுமதியோடு வந்தாய்?

தோம்:-ஐயா! தாங்கள் இவ்வாறுகூறியதற்குப்பின் பச்சாத்தாபமடைவீர்கள் நானும் தங்கள்குமாரத்தியும் ஒருவரையொருவர் நேசிக்கின்றோம் இடையறாப் பேரன்பாலாகிய நேசத்தை உறுதிப்படுத்துதற்காகவே இவ்விடம் சந்திக்கலானோம் என்றனன்.

வில்லியின்பிதா: குழந்தாய்! இவன் கூறுவது உண்மைதானா?

வில்லி--அவர்கூறுவது உண்மையே.

வில்லியின்பிதா:-(தாங்குதற்கரியகோபங்கொண்டு( அற்பசிறுமியே! உனக்குச் சவுக்காலடித்துக் காலுக்கு வல்லிபூட்டி உனது அறையிற்சிறைவைத்து அப்பமும் தண்ணீரும்தந்து துன்பப்படுத்துவேன். என்றுகூறி தோமைப்பார்த்துக் கலைப்புற்றஸ்பானியனே! கையிற்பொருளில்லாதகசடனே! உனது மூத்தோனிருக்க எனது மகளை மணக்கநினைத்தனையோ அவனைப்போலப் பெருங்கீர்த்திபெற்றாலன்றி நீ பெண்களையே சொப்பனத்திலும் நினைக்கக் கூடாது.

தோம்:-ஐயா! அதுவே எனது எண்ணம் நான் அப்படிவரவே தெண்டிக்கின்றேன்.

வில்லியின்பிதா:-கேவலம் மருந்துகலக்கிற நீயா பொருளும் கீர்த்தியும் அடைவாய் நீ அப்படிவருதற்கு முன்பாக எனதுகுமாரத்தி வேறே நீயறிந்தவொருவனுக்கு மனைவியாய் விடுவாள் என்றுகூறித் திரும்பிக்குமாரத்தியைப்பார்த்து அடி துஷ்டக்கழுதை இனிமேல் இவனுடன் உனக்கு என்னபேச்சு வீட்டிற்குச் செல்லுவாய்.

வில்லி:-பிதாவே! தோமைநான் நாயகனாகப்பெறுவது தங்களுக்கு விருப்பமில்லாவிட்டால் நீங்கள்கூறியவரை நான் விவாகஞ்செய்யமாட்டேன். மேலும் அவர் சீவந்தராய் இருக்கும்வரை வேறுபுருஷர்களுடைய முகத்தையும் பார்க்கமாட்டேன்.

வில்லியின்பிதா:-நன்றியற்ற நாயே! நீ இவ்வாறு எனதுவார்த்தைக்கு மாறுபேசிச் சத்துராதியாகவரவா உன்னைப்புத்திரியாகப் பெற்றேன் என்னுடைய எண்ணப்படி விவாகஞ்செய்ய உடன்படாவிட்டால் உன்னுடைய நாளுணவுக்காகப் பாடுபடுவாய் என்று கூறினான். வரும்.

இங்ஙனம்,

சோ. சிவஞானசுந்தரம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிவராத்திரி விரதம்.

சிவராத்திரி விரதமாவது மாசிமாதத்துக் கிருஷ்ணபக்ஷசதுர்த்தசி திதியிலே சிவபெருமானைக்குறித்து அனுட்டிக்கும் விரதமாம்.

வேதங்களுள்ளே சாமம் போலவும், யாகங்களுள்ளே அச்சுவமேதம் போலவும், நதிகளுள்ளே கங்கையைப்போலவும், தேவர்களுள்ளே விஷ்ணுவைப்போலவும், விரதங்களுள்ளே சிவராத்திரிவிரதமே முக்கியமுடையது.

முன்னொருகற்பகாலத்திலே பிரமதேவர் அழிந்து உலகம் முழுதும் பிரளயம் முடியுநாளின் இராத்திரியிலே. சிவசத்தியாகிய உமாதேவியார், நாலுயாமமும் சிவபூசைசெய்து புலரிக்காலத்திலே சிவபெருமானைநோக்கி நான் வழிபட்ட இவ்விராத்திரியானது சிவராத்திரி எனவும், இவ்விரதத்தைக்கிரமப்படி அநுட்டித்துப் பூசை செய்பவர்கள் முத்திபெறல் வேண்டுமெனவும் வேண்டிக்கொள்ள சிவபெருமானும் அப்படியே வரங்கொடுத்தருளினார். ஆகலாற் சிவராத்திரி எனவழங்கப்படலாயிற்று. இதுவன்றி இச்சிவராத்திரிக்கு வேறு காரணங் கூறுவாருமுளர்.

இச்சிவராத்திரியிலே, உபவாசஞ்செய்து நான்குயாமமும் நித்திரையின்றிச் சிவபூசைசெய்தல் வேண்டும். நான்குயாமபூசையும் அவ்வக்காலத்திற் செய்வது உத்தமம். ஒருகாலத்திற் சேர்த்துச் செய்வது மத்திமம். பரார்த்தம் ஆன்மார்த்தம் என்னும் இரண்டினும் சிவராத்திரி நான்குயாமபூசையிலேயே தேவர் முதலிய பரிவாரங்களுக்கும் சோமாஸ்கந்தமூர்த்தி முதலிய மூர்த்திகளுக்கும், பூசைசெய்ய வேண்டியதில்லை. ஆன்மார்த்தத்திலே மகாலிங்கத்துக்கு மாத்திரம் பூசைசெய்யக்கடவர் பரார்த்தம் ஆன்மார்த்தம் என்னும் இரண்டினும் விநாயகருக்குமாத்திரம் நான்குயாமபூசையுஞ் செய்தல் வேண்டும். சிவபூசையில்லாதவர், நித்திரையின்றி ஸ்ரீபஞ்சாக்ஷரமுஞ்செபித்துத் தேவாரதிருவாசகபாராயணமுஞ்செய்து, நான்குயாமமுஞ்சிவாலயதரிசனமும் பண்ணல்வேண்டும். இதில் உபவாசம் உத்தமம். நீரேனும் பாலேனும் உண்பது மத்திமம், பழம் உண்பது அதமம். தோசை முதலியபணிகாரம் உண்பது அதமாதமம்.

சிவராத்திரி தினத்திலே இராத்தியிற் பதினான்குநாழிகைக்குமேல் ஒருமுகூர்த்தம் லிங்கோற்பவகாலம். நான்குயாமமும் நித்திரையொழிக்க இயலாதவர் லிங்கோற்பவகாலம் நீங்கும்வரையினுமாயினும் நித்திரையொழித்தல் வேண்டும். இக்காலத்திலே சிவதரிசனஞ் செய்வது உத்தமோத்தம புண்ணியம்.

இவ்விரதத்தைவிஷ்ணுமூர்த்தியும் பிரமதேவரும், இந்திரனும் மற்றையதேவர் முனிவர் முதலிய பிறரும் அநுட்டித்து இஷ்டசித்தி முத்திகளை நன்கடைந்தார்கள். ஆதலால் இச்சிவராத்திரி விரதம் சைவசமயிகள் யாவராலும் ஆவசியகம் அநுட்டிக்கத்தக்கது. இங்ஙனம்,

S. V.

## புத்தகவரவு.

### கந்தபுராணம்,

### மகேந்திரகாண்டவுரை.

இவ்வுரைநடை, பதப்பொருள்களை நன்கு விளக்கி வேண்டுமிடங்களில் இலக்கணமுடிபுகளையும், மேற்கோள்களையும் கதைத்தொடர்புகளையும் எடுத்துக்காட்டிச்செல்லும் வனப்புவாய்ந்துளது. இடையிடையே பலபடப்பொருள் கொள்ளக்கிடக்கும் அரியதிருவிருத்தங்களுக்கு ஒருதலையுணிந்து செவ்வனேபொருள் விரிக்கப்பட்டிருக்கின்றது. இன்னும், பெரும்பாலுமாசிரியபரம்பரை யாட்சியிலடிப்பட்டுவந்த பொருளமைதிகள் பிறழாவாறு தழுவிச்செல்லுமிவ்வுரையின் தெள்ளியகதி, கற்கும்மாணவகர்களுக்கு இன்றியமையாதது. அன்றியும் எமதருமைத்தமிழாசிரியர். சுன்னாகம். ஸ்ரீமத். அ. குமாரசுவாமிப்புலவரவர்களாற் பரிசோதிக்கப்பட்டிருக்கின்றதெனின், அதனைமேல யாங்கூறுவதெல்லாம் வேண்டாக் கூறறுக்களாகும்.

இவ்வுரை, மதுரைத்தமிழ்ச்சங்கவித்துவானும் இந்துமதப்பிரசாரகருமாகிய யாழ்ப்பாணம் காரை, பிரமஸ்ரீ. கா. சிவசிதம்பர ஐயரவர்களால் எழுதப்பட்டு நந்தமிழுலகிற்குபகரிக்கப்பட்டுளது.

இது, இவ்வுரையாசிரியர் புதல்வரும் ஜூனியர் பரீக்ஷையிலிம்முறை சித்திபெய்தி மேலுங்கற்று வரும்மாணவகரும் ஆகிய

பிரமஸ்ரீ சிவஞானசுந்தரசர்மாவவர்களால் அச்சிடப்பட்டு வெளிப்படுத்தப்பட்டிருக்கின்றது. இப்பிரகடனாசிரியர் ஆண்டிவிளையாயுதிவ்வுலோபகாரமான இந்நன் முயற்சியிலூக்கங்கொண்டது "தந்தையறிவுமகனறிவு" என்பதற்கோருதாரணமாயிற்று. இதன்விலை ரூபா—2

நடராஜமாளிகை

No C 38 பருத்தித்துறை. என்றெழுதிக்கொள்க.

எமது "கணேசயந்திரசாலையிலும்" பெற்றுக்கொள்ளலாம்.

### திருக்கணிதபஞ்சாங்கம்.

பரிதாவி வருடத்திருக்கணிதபஞ்சாங்கம் வரப்பெற்றோம். இது ஸ்ரீமத் சுந்தரேசுவர சிரௌதிகள் பிரதமசிஷ்யரும் கலம்பகம் ஸ்ரீமத். தி சிதம்பரநாத ஜோதிஷராவர்கள் மருகரும், காலக்கணித நாளுட்பங்களின் பேதாபேதங்களினியல்புகள் யாவும் ஐயந்திரிபறக்குருமுகமாக நன்குணர்ந்தவர்களும் ஆகிய பிரமஸ்ரீ வே. கார்த்திகேயஐயரவர்களால் இந்தியா தேசவழக்காட்சியும் நோக்கிக்கணிக்கப்பட்டது. ஜகத்குரு ஸ்ரீமத். சங்கராசாரியசுவாமிகள் பிரசாதித்த யோக்கியதா பத்திரிகையொடு கூடிய தென்றால் உலகவங்கீகாரமென்பது சொல்லவும் வேண்டுமோ காலக்கிரமங்கட்கேற்ப வேண்டும் திருத்தங்கள் கண்டுகணிக்கப்பட்டுள்ளது. இதுதிகம் வருடப்பதிப்பு வடநூலாதாரங்கள் கொண்டு நிர்ணயிக்கப்பட்ட சிலவிரதாதிகள் மிகவுமருமையுடன் பாராட்டப்படற்பாலன. இதன் விலை சதம்—25

### பரிதாபிஸு இந்துக்கலண்டர்.

இது யாழ்ப்பாணம் கோண்டாவில் சோதிடர் பிரமஸ்ரீ. சு சதாசிவக்குருக்களவர்களால் இயற்றப்பட்டு வெளிப்படுத்தப்பட்டிருக்கின்றது. இதில் பஞ்சாங்கத்திற்கு வேண்டுவனயாவுமமைந்திருக்கின்றன. இவ்விஷயத்தையெல்லாம் மாங்கில பாஷையினுல் மொழிபெயர்த்துத்தந்த குருக்களவர்கள் சோதிடவன்மையை நம்மவரனைவரும் நன்கறிவர்.

"வித்தியாபானு" என்னுமாதாந்தத் தமிழ்ப்பத்திரிகையினதிபர் ஸ்ரீமான் முரா. கந்தசாமிக்கவிராயரவர்களால் வித்யாபானுயந்திரசாலையினின்றும் வெளிப்படுத்தப்பட்ட பரிதாபிஸு கலண்டர் வரப்பெற்றோம். இதனைப் பார்ப்பவர்களுக்கு பஞ்சாங்கத்தின் உதவிவேண்டா. வேண்டுவனயாவுஞ் சேர்க்கப்பட்டிருக்கின்றன.

☞ இம்முறை பத்திரிகையின்காலநியதி தவறினமையின், ஏனையபுத்தகங்களும் பத்திரிகைகளும் மறுமுறை எழுதப்படும். அனுப்பியவாசிரியர்களை மன்னிக்குமாறு வேண்டுகின்றேன். ப—ர்.

## சமாசாரம்.

### பெரியபுராணபடனபூர்த்தி.

சுதுமலையிலே, ஸ்ரீராஜராஜேஸ்வரிஅம்பாளாலயத்திலே, சென்ற ஆவணிமாதம்முதல் நடைபெற்றுவந்த இப்புராணபடனம், பங்குனி மீ ௨௰ உ ஸ்ரீமான். (நொத்தாரிசு) கு. ஆறுமுகம்பிள்ளை அவர்களால் பூர்த்திசெய்யப்பட்டது.

அன்று ஷை பிள்ளையவர்களால் அம்பாளுக்கு மகாஅபிஷேகமும், பிராமணசமாராதனையும், அன்னதானமும், பெருந்தொகைப் பொருள்விடுத்து நடத்தப்பட்டன.

பின்நிகழ்ந்த திருவிழாக்காட்சி, ஷை பிள்ளையவர்களுக்குக்கிடைத்த திருவருட்பேற்றை விளங்கக்காட்டியது.

இப்பெருஞ்சிவபுண்ணியங்களை நிறைவேற்றியபிள்ளையவர்களுக்கு எம்பெருமான் பூர்வகிருபாகடாக்ஷம்கிடைத்து மங்கலவாழ்வுறப் பிரார்த்திக்கின்றோம்.

### இந்திரவிமானோற்சவம்.

இது வண்ணைவயித்தீஸ்வர சுவாமிகோயிலில் பங்குனிமீ ௩௰ உ நடந்த உற்சவமாகும். இவ்விமானம் ஸ்ரீ. சி. சபாரத்தினமென்பவரால் வே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ண்டுமேனை பொருள்கள் இந்தியாவினின்றும் தருவிக்கப்பட்டு பெருந்தொகைப்பொருள் விடுத்து பலவிதமான பணிநுட்பங்களும், அழகும் விளங்கச் செய்விக்கப்பட்டது இதனைக் கண்ணும் மனமுங்கவ நம்படி செய்தவர் பரம்பரையாக சிற்பநூற்றொழிலிற் றுசிகிய அறிவுடன் தொழில்வன்மையும் படைத்த ஸ்ரீ. நா. தம்பியப்பா சாரியாரும் இவருக்கு ஆடி கோயிலாதீனகர்த்த ஸ்ரீமான். பொ. க. பொன்னுச்சாமிச்செட்டியாரவர்களால் தங்கக்காப்புப்பரிசளிக்கப்பட்டது.

வட்டுக்கோட்டை பிரசித்தநொத்தாரிஸ். ஸ்ரீமான் அ சிதம்பரநாதபிள்ளையவர்களால் வட்டுக்கோட்டை மாரியம்மன் கோவிலிலே சித்திரை-மீ ௧உ-ம்வ நடத்தப்பட்ட தேவியுத்சவம் தரிசித்த பக்தகோடிகளுக்குப் பேரானந்தத்தைத் தந்தது. அன்று அவர்கள் சைவாகம விதிப்படி செய்வித்தனயாவும் பாராட்டற் பாலனவாம்.

ஸ்ரீமான் க. வேலுப்பிள்ளையவர்கள் யாழ்ப்பாணம் சுதேசநாட்டியப் பத்திராதிபரும் மானேசரும் ஆகிய இவர்களுக்கு நாமெல்லாம் மிகவும் மிக்கமுற்று வருந்த, வினைப்பகுதவல் நேர்ந்த பெருந்துன்பினை அனுபவித்துத் தொலைத்து, நீங்கி தமது ஊருறாவின் நண்பர்களிகூரச் சுகமாகவந்து சேர்ந்தார்களென்பதை அறிந்து பெருமகிழ்ச்சியுறுகிறோம்

பொருள்களின்விலையேற்றத்திற்குக்காரணம்:—வியாபாரிகள் அளவை, நிறையைக்குறைத்து, ஒன்றுடன் மற்றொன்றைக் கலந்தும் இவ்வாறு மாறிச்செய்யுஞ் சூதினால் வாங்குவோர்க்கு அதிகம் நட்டமுண்டாகின்றது
அரிசி மூடைகள் வாங்கியவுடன் ஒவ்வொரு மூடையிலும் மூன்று நாலுபடி அரிசி எடுத்து அதனை அப்படியே விற்கின்றார்கள் இவைபோல் வன பல.

கணிதத்தில் வன்மை:—திருநெல்வேலி ஜில்லாவில் 14-வயதுடைய ஒரு தமிழ்ப் பையன் திருவாங்கூரில் வந்து தன்கணித சாமர்த்தியத்தைக்காண்பித்தான் ஒன்றிரண்டுசிமிஷங்களுள், பெருந்தொகைகளைக் கூட்டியும் 6 7 டெசிமல் தானங்கள் வரைக்கும் நிச்சயமான மறுமொழி சொல்லியும் இப்படி எவ்வளவு சங்கடமான கணக்குகளையெல்லாம் செய்து முடிக்கின்றனும். அவன் னு மகாரமுந் தெரியாதாம. பூர்வஜன்மவாசனையுண்டோ இன்றோ.

கண்ணாடிச் சிம்மினிகள்:—சிமினிகளை வாங்கினவுடன் சாணிப்பாலில் இரண்டு நாளைக்கு ஊறவைத்து தண்ணீராற் கழுவியுபயோகித்தால் அதிக சூட்டினால் வெடியாதாம்.

மதுபானம்:—இங்கிலாந்தில் மேரிலிபோன் என்னுமிடத்தில். அனி எனப்படும் ஒருத்தி மிதமிஞ்சிக்குடித்து எப்பொழுதும் வெறிகொண்டேயிருப்பாளாம் அவளுக்குத் தன்பிள்ளைகளைக்கூட ஆண் பெண்ணென்னும் பேதமும் தெரியாதாம். கோட்டார் அவளுக்கு ஆறுமாதககடுங்காவற்றண்டனை விதித்திருக்கின்றார்கள்.

கிழமணம்:—அமெரிக்காவில் 75-வயதுடைய அல்சாப் என்னுங் கோடீசுவரர் 19-வயதுடைய வொருசிறு பெண்ணை மணஞ்செய்து கொண்டனராம்.

வீணைநரம்பு:—வீணைகளுக்குப யோகிக்கும் நரம்புகள், வெய்யிலில் காயப்போட்டு உலர்த்திப் பக்குவப்படுத்திய ஆடுமாடுகளின் குடல்களேயாம். இவ்வாறு பதப்படுத்தி இக்குடல்களை எவ்வளவு தொகையாக அனுப்பினாலும் லண்டனிலே வாங்க ஒருகம்பனியார் ஆயத்தமாயிருக்கின்றார்களாம்.

கல்யந்திரம்:—கற்களை யரிக்க ஆஸ்திரேலியாவில் ஒருயந்திரம் கண்டு பிடிக்கப்பட்டிருக்கின்றதாம்.

மீன்சந்தை:—யாழ்ப்பாணத்திலிருந்து காங்கேயன்துறைக்குச் செல்லும் பெருந்தெருவினருகே மரங்களின்கீழே சிற்சிலவிடங்களில் மீன்விற்கும் பெண்கள் வந்திருந்து விற்பனைசெய்து அவ்விடத்தைச் சந்தையாக்கிக் கொண்டனர். பெருஞ்சனக் கூட்டம் அவ்விடத்திற் கூடிக்கொள்ளுகிறுல், வண்டிகளும். பிரதானமாய் ஒற்றைநச்சகரவண்டிகளும் செல்வதற்குப் படுங்கட்டம் சொல்லமுடியாது வழிச்செல்வோர் அனுபவிக்கும் துர்நாற்றம். சகிக்கமுடியாது. இதனை அரசாட்சியாரும் அங்கங்குள்ள அதிகாரிகளும் கவனிக்கும்படி வேண்டுகின்றோம்.

மூளாய்வைத்தியர். பிரமஸ்ரீ. இ. வைத்தீஸ்வரக்குருக்களவர்கள் மூத்த புத்திரர் பிரமஸ்ரீ. மகாகணபதி ஐயர் சித்திரை-மீ. ௩-உ சிவபதமடைந்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காசிப்பட்டு
# பீதாம்பரங்கள்.

சுத்தமானபட்டு.] [நாணயமான ஜரிகை.
சாதய விலைகள்.
பிடித்தமில்லாததைத்
திருப்பிப் பெற்றுக்கொள்ளுவோம்.
கீழே கண்ட பட்டுத் தினுசுகள்
எல்லா நிறத்திலும் கிடைக்கும்.

பட்டுச்சேலைகள்:—௧௬-முழம் நீளம் ௨௫-அகலம் விளிம்பும்முந்தியும் சரிகைவேலைகள் உடல் சாதா விலை ரூபா ௨ முதல் ௫-வரை அதே மாதிரி சேலை உடலிலும் சரிகைப்பூ புட்டா போட்டது ரூபா ௨௰ முதல் ௧௱ வரை.

ரவிக்கைகள்:—விளிம்பும் முந்தியும் சரிகை வேலைகள் உடல் சாதா ரூபா ௨ முதல் ௮-வரை.
உடலிலும் புட்டா ஜரிகை பூவேலைசெய்தது ரூபா ௩ முதல் ௨௰ வரை.

துப்பட்டாக்கள்:—௬-முழம் ௨-இ அகலம் விளிம்பும் முந்தியும் ஜரிகைவேலை உடல் சாதா ரூபா ௮-முதல் ௨௫-வரை.
அதே மாதிரி உடலிலும் ஜரிகை வேலைகள் ரூபா ௧௪-முதல் ௫௰-வரை.

சவுக்கங்கள்:—௨இ முழம் நீளம் ௨இ-அகலம் சுற்றி ஜரிகை மூலையில் மாங்காய் ரூபா ௬-௮-௰ முதல் ௧௫ வரை.
அதே மாதிரி உடலிலும் பூக்கள்போட்டது ரூபா ௯ முதல் ௩௰-வரை.

வெண்பட்டு வேஷ்டிகள்:—௬, ௭, ௮, ௯-முழம் நீளம் ௨இ, ௨ஐ; ௩ முழம் அகலம் சுத்த வெண்பட்டு கோயமுத்தூர் வேஷ்டி மாதிரி சிகப்பு சன்னக்கம்பி போட்டது விலை ரூபா ௮இ முதல் ௨௰-வரை. அதேமாதிரி வேஷ்டிகள் சிகப்பு சன்னக்கம்பிக்குப் பதிலாக ஜரிகையால் சன்னக் கம்பிபோட்டது ரூபா ௧௨ முதல் ௩௰-வரை.

ஜோ. சவுக்கங்கள் ௨இ×௨இ-முதல் சிகப்புக்கம்பிக் கரைபோட்டது ரூபா ௫ முதல் ௮-வரை. ஜரிகைக்கம்பிபோட்டது ரூபா ௯ முதல் ௧௫-வரை. ஜோ. வெண்பட்டு வேஷ்டிகள் ருத்திராக்ஷக் கரை போட்டதும் அதே விலைக்குக் கிடைக்கும்.

பட்டுத்தலைக் குட்டைகள்:—௪இ+௪இ-முழம் சதுரம் வெண்பட்டு ஜரிகை ரூபா ௧௩ முதல் ௨௫-வரை. எல்லாக் கலரிலும் கிடைக்கும் மத்தியில் ஜரிகை புட்டா பூப் போட்டுக் கிடைக்கும்.

சுத்தமான கம்பிளி போர்வைகள்:—௬-முழம் நீளம் ௩-அகலம் எல்லா நிறத்திலும் ரூபா ௫ முதல் ௮-வரை.

காஷ்மீர் கம்பளிநயம்சால்வைகள்:—ஜோடி அகலநீளம் எல்லா நிறத்திலும் சாதா ரூபா ௮ முதல் ௧௫-வரை, பட்டினால் விளிம்பும் முந்தியும் ஜரிகை வேலை செய்தது மூலையில் மாங்காய்போட்டது ரூபா ௧௰ முதல் ௨௰ வரை. ஜரிகையில் அதே மாதிரி வேலை செய்தது ரூபா ௧௨ முதல் ௫௰-வரை,

உருத்திராக்ஷங்கள்:—௬-முகம் ௩௩. உள்ள மாலை அணா எட்டு முதல் ரூபா ௫-வரை, ௭, ௮, ௯, ௰, ௧௧, ௧௨, ௧௩, ௧௪, ௧௫, ௧௬-முகம் தனி மணிகள் ரூபா ௫ முதல் ௨௫-வரை. ௧௰௮-கொண்ட ஜெபமாலை அணா ஆறு முதல் ரூபா ௫ வரை.

வயிரவர் காசிக்கயிறு:—௧-கெ. ௧௱-க்கு ரூபா ௩. ௨-கெ. ரூபா ௨; ௩-கெ. ரூபா ௨; ஜோடி சிறிது ஆறணா அதிலும் சிறிது நாலணா.

பெண் குழந்தைகள் விளையாடும் பித்தளைப் பாத்திரங்கள் செட்டு:—பித்தளை வெங்கலத்தால் செப்பு, குடம், கரண்டி முதலிய ௩௨-சாமான்கள் அடங்கியது சிறிது ரூபா ௨. பெரிது ரூபா ௪.

நயம்கஸ்தூரி:—தோலா ௧-க்குரூபா ௩௫.
நயம்பால்காயம்:—சுத்தமானது தோலாக்கு அணா ௨.

விலை ஜாபிதா இனமாக அனுப்பப்படும்.
சிங்கப்பூர் பினாங்கு முதலிய வெளி தேசத்தார் ஆர்டருடன் முன்பணம் அனுப்ப வேண்டும்.

கடிதங்கள் தமிழில் எழுதலாம்.

விலாசம்:—மானேஜர்,
பட்டு பீதாம்பர கம்பேனி, காசி.

*Manager, Silk Petamber Co*
*BenaresCity.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்துஸ்தான் சகாய விமாச்சங்கம் (லிமிற்றட்)

௧௮௮உம் வருஷத்து இந்தியசங்க சட்டப்பிரகாரம் இச்சங்கம் பதிவுசெய்யப்பட்டது.

இதற்கு மூலதனமாக ஒருகோடிரூபா அநுமதிசெய்யப்பட்டிருக்கின்றது.

இதன்தலைமை அதிகாரசாலை கல்கத்தாவிலே டல்ஹவுஸி சந்தி ௩௦ம் நம்பர் கட்டடம்.

சபாநாயகர்

காஸிம்பசார் மகாராஜா மனீந்திரசந்திர நந்தியகதூர்

உப சபாநாயகர்கள்

௧. நாட்டூர் மகாராஜா ஜகதீந்தரநாதறாய் பகதூர்.

௨. தீகபட்டியமகாராஜா பிரமாதநாதறாய்.

☞ இந்தச் சங்கத்தில் நூறுரூபா முதற்கொண்டு எவ்வளவு பெருந்தொகைக்கும் பொருந்திக்கொண்டு அதற்குரிய விதப்படி கட்டிவரலாம். மற்ற விமாக் கம்பனிகளைப் பார்க்கிலும், இந்தச்சங்கம் விசேஷ அநுகூலமுடையது. இந்தச்சங்கத்திலே கட்டுகிற காசு சிலகாலங்களிற் கட்டத்தவறினும் நட்டமாகாது. மற்றக் கம்பனிகளைப்பார்க்க இச்சங்கத்தினது கட்டுவீதம் மிகச் சகாயமானது.

எஸ். கே. லோட்டன் அன் கோ
இலங்கை ஏசண்டு
பறங்கித்தெரு
யாழ்ப்பாணம்.

## விளம்பரவேதனம்.

| | ரூ. | ச. |
|---|---|---|
| வரி ௧-க்கு ... ... | | ௮ |
| காற்பத்திக்கு ... | ௧ | ௦௦ |
| அரைப்பத்திக்கு ... | ௨ | ௦௦ |
| ஒருபத்திக்கு ... ... | ௩ | ௫௦ |
| ஒருபக்கத்துக்கு ... | ௬ | ௦௦ |

## பத்திரிகைவேதனம்.

| | ரூ. | ச. |
|---|---|---|
| உள்ளூருக்கு வருஷம் ௧-க்கு | ௨ | ௦௦ |
| இலங்கை இந்தியாவுக்கு வருஷம் ௧-க்கு ... ... | ௨ | ௨௫ |
| பினாங்கு சிங்கப்பூர் வருஷம் ௧-க்கு | ௨ | ௫௦ |
| மோரீஸ் செட்டால் வருஷம் ௧-க்கு | ௩ | ௦௦ |
| தனிப்பிரதி ... ... | | ௨௦ |

☞ கையொப்ப நேயர்கள் பத்திரிகை வேதனத்தை முற்பணமாகஅனுப்பி உதவி செய்யும்படி வேண்டுகின்றோம்.

### கணேசயந்திரசாலையில் விலைக்கிருக்கும் புத்தகங்கள்.

| | ரூ. | |
|---|---|---|
| திரிகோணசலபுராணம் | ௦ | ௭௫ |
| இரகுவம்சம் (செய்யுள்) | ௩ | ௭௫ |
| நல்லைவெண்பாமூலம் | | ௨௦ |
| யாழ்ப்பாணச்சமயநிலை பரிதாபி வருஷ | | ௧௦ |
| திருக்கணிதபஞ்சாங்கம் | | ௨௫ |
| வாக்கிய ,, (தமிழில்) | ௦ | ௨௫ |
| ஷை (இங்கிலீசில்) | | ௫௦ |
| திருவூடல் | ௦ | ௫ |
| ஆறுமுகசுவாமிவிருத்தம் | ௦ | ௩ |
| எட்டிகுடியேசல் | ௦ | ௩ |
| நடராசபப்பத்து | ௦ | ௩ |
| யாழ்ப்பாணவைபவமா (அரிய) | | |
| சுப்பிரமணியசுவாமி திருத்... | ௦ | ௩ |
| தேவாரத்திரட்டு (அ. குமாரசுவாமிப்புலவரவர்கள் செய்குறிப்பு) | ௦ | ௧௨ |

ஆ. சண்முகரத்தினசாமா
வண்ணார்பண்ணைப்போஸ்டு
யாழ்ப்பாணம்.

## ஞானபபிரகாசம்.
### (தொகுதி—௧.)

இதன் முதலாம்வருடச் சஞ்சிகைகள் ஒருங்கு சேர்த்து மிகவழகாகக் கட்டப்பட்ட புத்தகம் விலைக்கிருக்கின்றது. மாணவர்களுக்குச் சமய சாஸ்திர உபகாரக்கொடுப்பதற்கேற்ற ... தயாறாகவேயுட்பட விலை ரூபா 3—00

ஞானப்பிரகாச ஆபிஸ்,
வண்ணார்பண்ணைப்போஸ்டு,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அசாதி ரோகங்களுக்கு பிரதிக்ஷ

# அவுஷதம்.

## கஸ்தூரிதிராவகம்.

இந்தத் திராவகத்தில் ஒருநேரத்துக்கு மூன்று சொட்டுவீதம் ஒருஒயின் கிளாஸ் தண்ணீரில்விட்டு காலை, மாலை, இரா படுக்கும்நேரம் சாப்பிட்டால் எப்பேர்ப்பட்ட நீர் அலிவினுல் தாஙக முடியாத வருத்தத்தை மூன்றுநாளையில் சுகமார்க்கும். 40-நாள் மருந்து சாப்பிட்டால் வியாதி நன்றாய்ச் சொஸ்தமாகும். தருணவயசுள்ளவர்களுக்கு உண்டான பக்க வாய்வு துர்நடத்தையால் ஆண்மை பலமற்று சையோகஞ்செய்ய இயலாதவர்களுக்கு உள்ளுக்குச் சாப்பிட மேற்படி திராவகமும் ஆணுடம்பில் பூச துஜ்ஜிபங்கதைலமும் எடுத்து உபயோகிக்க வேண்டியது. இன்னும் மேற்படி திராவகமானது இருமல், மூலச்சூடு. காசரோகம். அதிகநாட்சென்ற வாதரோகம். தலைச்சுற்று மூளை பலவீனம் ஞாபக சத்திக்குறைவு, கண்புகைச்சல் பார்வைக்குறைவு; நாட்சென்றபிரமேகம் இவைகளுக்குங் கைகண்ட ஔஷதம். இந்தமருந்திலே கஸ்தூரி. தங்கபஸ்பம், அப்ரக்பஸ்பம், சாயபிராணிப் பாகம் வேறு மூலிவகைகளும். சேர்த்து திராவகம்வடித்துவைத்திருக்கிறேன். இந்த மருந்துகளெல்லாம் சேர்க்கப்பட்டிருப்பதனுல்தான் இது சீக்கிரம் சுகமடைவிக்குமென்று கூறுகிறேன். இந்த மருந்தைக்கொடுத்து அநேக பிரயானங்களைச் சுகப்படுத்தி விலையுயர்ந்த வெகுமதிகளும் பெற்றிருக்கிறேன் இப்போது எல்லாருடைய பிரயோசனத்துக்காக சொற்பசெலவெடுக்க வெளிப்படுத்தி சம்பண்ணிவருகிறேன். பித்தபாண்டு [illegible]; காய்ச்சல் கட்டி. வயிற்றிலிருக்கும் [illegible]க்கு கைகண்ட ஔஷதம். விலை அரை [illegible]க்கு ரூ 10 இதற்குக் குறைந்து அனுப்பமாட்டாது. தபாற் செலவு பிரத்தியேகம்.

## துஜ்ஜிபங்கதைலம்

சிலர் தம் இளம்பிராயத்தில் புத்திகீனமாய் இந்திரியத்தை தம்மையறியாமல் [illegible] கொள்வதால் சிலகாலைக்குப்பின் [illegible] ஆணுடம்பு பெலனற்றுச் சுருங்கி [illegible]ப்போய். இந்திரியம் குறைந்தும். ஸ்திரி சையோகத்தால் அநேக உஷ்ணமான மருந்துகள் சாப்பிட்டு பெலனற்றுப்போகின்றார்கள். இவ்விருவகையுள்ளவர்கள் மனக்கவலையுடன் வியாதியை ஒருவருக்கும் சொல்லாமல் வெட்கப்பட்டு இருப்பார்கள். அவர்கள் இத்தைலத்தை ஆண் உடம்பிற்பூசி உள்ளுக்கு கஸ்தூரித்திராவகமும் சாப்பிட்டால் ஆண் உடம்பு சரியான நிலைமைக்குவந்து பலப்பட்டு இந்திரியம் விர்த்தியாகி 44-தினத்துக்குள் வியாதி சுகப்படும். 21-நாள்தைலம் பூசி மேற்படி திராவகம் சாப்பிடவேல் வியாதியின் சுகந்தெரியும் ஒரு அவுன்ஸ தைலத்தின் விலை ரூ ½. அணு 8. தபாற்செலவு பிரத்தியேகம்.

## வீரியஸ்தம்பனக்குளிகை.

ஆச்சரியம்! மிக்கஆச்சரியம்!! ரோகநற்லர்களுமக்கு ஒரேகுளிகையில் தெரியும் இக்குளிகை (இத்திராசனம்) ஒருநாளில் ஆயிரம் ஸ்திரீகளைச் சம்போகிக்கிறதாக உண்டாக்கப்பட்டது இவைச் சிலர் சாஸ்திரத்திற் சொல்லியபிரகாரம் செய்யாமல் சொற்பகிரயத்திற்கு விற்பனைசெய்துவருகிறார்கள். அதைச் சனங்கள் பெற்று அதிலே சொல்லிய காரியங்கள் முழுதும் வித்தியாசப்பட்டு ஏமாந்துபோகிறார்கள்! ஆனற்சாஸ்திரப்படி அதிக பொருள்செலவழித்துச்செய்கிறவர்களிடம்பெறப் பின்னடைகிறார்கள். இது உலகவியல்பே. இதில் முக்கியமாயறியவேண்டிய காரியம் யாதெனில் இதின் முழுக்கிரயமும் கொடுத்து எடுத்துஒருகுளிகையாற் சுகமறியலாம்காரியமும் விளங்கும் இதைப்பற்றி அதிகமாகச் சொல்லத்தேவையில்லை 12 குளிகைகளுக்குக் குறைய அனுப்பப்படமாட்டா. பரீட்சித்தவர்களே இதன்சுகத்தை அனுபவிப்பார்கள். 12-குளிகைகளின் விலை ரூபா 2. தபாற்செலவு அணு ௪.

சாப்பிடும்விதம்—சையோகஞ்செய்ய அரைமணித்தியாலத்துக்கு முன் ஒருமாத்திரையைச் சாப்பிட்டவுடன் காய்ச்சிய பசுப்பாலில் கற்கண்டுபோட்டுக்குடித்தால் இந்திரியம் இளகாது இளகவேணுமானல் எலுமிச்சம்பழம் சாப்பிடவும்,

கெஙகாதரர் தைலம்:—அண்டவாய்வுக்குக் கைகண்ட உண்மையான மருந்து இதன் விலை அவுன்சு ரூபா 5.

மகாநாராயண்தைலம்:—வாய்வுகள் கபாலபீனிசம் முதலானதுக்குக் கைகண்டது 1 அவுன்சு ரூபா 1. மேற்கண்ட மருந்துகளுக்கு தபாற்செலவு பிரத்தியேகம்.

## மிருத்துச்சீவன் அல்லது கஸ்தூரிமாத்திரை

எட்டுவிதமான சுரத்துக்கும், அசுத்தசல [illegible] தோஷ முதலான விஷசெந்துகளின் [illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலேரியா ஆகிய விஷக்காச்சல்களுக்கும். 18-விதமான சன்னிக்கும் இதில் ஒருமாத்திரையை இட்டிச்சாற்றி லுரைத்துச சாப்பிட்டால் எப்பேர்ப்பற்டசன்னியும் ஒரு அல்லது இருவேளை மருந்திற் சுகமாகும். எழுவேளைசாப்பிட்டால் சன்னி காச்சல் சுரம் முதலியன சுத்தமாய்ச் சுகமாகும். 12 குளிகையின் விலை ரூபா 2.

## காமனிமது பஞ்சனி மாத்திரை.

இது தங்கம்; அபரக்பஸ்பம்: கஸ்தூரி. குங்குமப்பூ, லிங்கசெந்தூரம் முதலிய விலையுயர்ந்த மருந்துக்கள் சேர்த்துச் செய்யப்பட்டுத் தயாராயிருக்கிறது இதன் சொற்பகுணத்தைமட்டும் காட்டுகிறேன். சீரிழவு காசம் இருமல் சுவாழ தீராதவாதரோகம் பிறமேகம் மூலசூடு பதிதாய்ச்சாறும் அண்டவாதம் வெள்ளைமுதலிய வியாதிகள் தீர்ந்து தாதுபுஷ்டியுண்டாகும். மூன்றுநாளில் நல்லகுணத்தெரியும் 44-நாளில் வியாதி பூரணசுகமாகும். காலை மாலை ௧௪-நாள் சாப்பிடக்கூடிய 28-மாத்திரைகளின் விலை ரூபா 5. ௪௪-நாள் சாப்பிடக்கூடிய 88-மாத்திரைகள் எடுத்தால் ரூபா 13-க்குக் கொடுக்கப்படும். தபாற்செலவு பிரத்தியேகம்.

## சந்திரிக்கா பிரதம மாத்திரை.

இத்தமாத்திரை காசம் பகந்திரம் அண்டவாய்வு பக்கவாய்வு பித்தபாண்டு வெள்ளை நீர்க்கடுப்பு நீரடைப்பு மீன்சக்கபாலம் தூர்ஸ்திரீ கமனத்தாலுண்டான கோய்கள் வெண்குட்டம் நீரழிவு போகத்தாலுண்டான நோய்களையெல்லாந் தீர்க்கும். இம்மாத்திரையை 21-நாள் சாப்பிட்டால் பூரணசுகமுண்டாகும். மருந்தெடுக்கும்போது வியாதிக்கேற்ற அனுமானம் தெரிவிப்போம். 44-குளிகையின் விலை ரூபா 3. சதம் 50.

## புத்தகங்கள்.

பின்னும் காட்டப்பட்டிருக்கும் அருமையான புத்தகங்கள் மானிடர்எவரும் இகபரங்ளைகளைக் கருதி அவைகளைக் கைப்பற்றிக்கொள்ளக் கடமைப்பட்டிருப்பதால் இவ்விருவிஷயங்களுக்கும் குருவைப்போற் போதிக்கக்கூடிய மெத்த அருமையானபுத்தகங்களானதால் ஒவ்வொருவரும் இவைகளைக் கட்டாயம் வாங்கிவாசிக்கவேண்டியது.

இவைகள் செந்தமிழ் அலங்காரநடையில் எவரும் வாசித்தறியக்கூடிய வெள்ளைமொழிகளா லியற்றப்பட்டு வாசிப்போருக்கு இன்பத்தையும் மனோதசாகத்தையும் கொடுக்கக்கூடியனவைகள், சொற்பபிரதிகள்தான் இருக்கின்றன. காலகரணஞ்செய்யவேண்டாம்.

௧. கோகசாஸ்திரம் மாபிள்கட்டு ஒருபிரதி ரூபா 3
௨. கலிக்கோ ,, ௪
௩. கைத்தொழிற்போதினி மாபிள்கட்டு ,, ௧-அ
கலிக்கோக்கட்டு ,, ௨
௪. பூலோகெளஷதோபகாரி வாணவேடிக்கைகள் அடங்கிய பத்தாம்சங்கியை 1-க்கு அணா10
௫. அனேக இங்கிலீஷ்சாமான்களடங்கிய ஒன்பதாம் சங்கியை ஒன்றுக்கு அணா ௧௨
௬. சோகன்லால் சரித்திரம் ,, ,, அ
௭. இன்ஸ்பெக்டர் சிபுசாய்புசரித்திரம் ,, ௧௨
௮. டை சரித்திரமும் சோகன்லால்சரித்திரமும் ஒரேகட்டிடம் ஒன்றுக்கு ரூ 1-4
௯. ரூசியயப்பானியயுத்தம் இருபகுதிகள் ரூ 1-00
௰. இரசமணிசெய்யும் புத்தகம் (அ பக்கம்) ரூ ௧-அ

மேற்காட்டியவைகள் வேண்டினோருக்கு தாமதமின்றிச் சாக்கிரதையோடு அனுப்பப்படும் தபாலில் வேண்டுவோனைக்கு தபாற்செலவு பிரத்தியேகம். மற்ற விபரங்களுக்குக் காட்லாக்கை யெடுப்பித்துப்பார்க்கவும். இனமாக அனுப்பலாம். ஒருமுறை இப்பொருள்களைவாங்கி, தினமும்மகிழ்வடையுங்கள். எமதுவிலாசம்.

மகாராஜ கேங்காப்பிரசாத் பண்டிதர்
மருதானை முதலாம் டிவிசன் No. 74.
கொழும்பு.

# அரியபிரதிமைப்படம்.

ஸ்ரீலஸ்ரீ. ஆறுமுகநாவலரவர்களின் மருகரும் மாணாக்கருமாகிய வித்துவசிரோமணி ஸ்ரீமத். ந. ச. பொன்னம்பலபிள்ளை அவர்கள் சித்திரப்பிரதிமைப்படம் (Portrait) எமது ஞானப்பிரகாச ஆப்பீஸில் விலைக்குப் பெற்றுக்கொள்ளலாம் ஸ்ரீமான். எஸ். சே. (மேல்நற்றன்) கனகரெத்தினம் அவர்களால் அமைக்கப்பட்டது.

*Printed and published by the Proprietor A. Sanmugaretna Sarma at the Genasa Press, Jaffna.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மதனவிந்தாதிமெழுகு

இதில், அரைவிராகனிடை காலைமாலை சாப்பிட்டுவந்தால், நீர்க்கடுப்பு நீரெரிவு நீரடைப்பு வெள்ளைபடுதல் சலமேகம் மேகத்தினுலுண்டாகியநீரிழிவு தண்ணீர் தாகம் இராக்காச்சல் இடுப்புளைவு இருமல் தேகமெலுப்பு வறட்சி கண்புகைச்சல் தலையிடி தடிமன் தும்மல் மூளைப்பலயீனம் நித்திராபங்கம் வயிறூதல் வயிற்றோட்டம் பசியின்மை முதலியமேகச்சூட்டினுலுண்டாகிய சகலவியாதிகளைநீக்கி அதிகபசியும் விந்துவிளைவும் போகசத்தியும் சந்தானவிருத்தியும் ராசகருவிகள்பெலத்து இரத்ததாதுக்களாகிய நரம்புகளின் வலியும் முகவசீகரமுமுண்டாகும், பத்தியமில்லை 20 நாள் சாப்பிடக்கூடியமருந்து விலை ரூபா 7 50.

## கபாலபித்தமேகசந்தனாதிதயிலம்.

இத்தயிலத்தை வாரமொருமுறைதேய்த்து முழுகிவந்தால் தலையிடி நாட்பட்டகபாலம் தலைபரிப்பு பொடுகு மயிருதிர்தல் தும்மல் கண்கரிப்பு கண்புகைச்சல் பார்வைக்குறைவு காதரிப்பு வாயூறல் வயிற்றுப்புகைச்சல் புரட்டு ஓங்காளம் பல்லுக்கொதி முதலியவைகளைத்தீர்க்கும் சீரம்கல்ல குளிர்ச்சியாயிருக்கும் அவுன்ஸ 12 கொண்டசீசா ரூபா 5.

## வச்சிரதந்தபற்பம்.

இப்பற்பத்தால், பல்துலக்கிவரில் எவ்வளவுநாட்பட்ட வியாதிகளையும் தீர்க்கும். பற்கொதி பல்லசைவு முரசுகரைதல் சிதல் இரத்தம்வருதல் பற்கூச்சம் முரசுவீங்கல் பற்பேத்தை பற்சூத்தை முதலியவைகளும் சிரசிலுள்ள நீர்ச்சம்பந்தமான வியாதிகளும் ஆரம்பவெள்ளெழுத்துமுதலியனவகளையும் தப்பாமல் தீர்க்கும் அனேகரால்கைகண்டது.

ஒருமாசம்விளக்கக்கூடியபற்பம் ரூபா 1

இதுகளல்லாமல் சிறுபிள்ளைகளுக்கு கோரோசனைக்குளிகைகள் சனைநெய் கிரந்திஎண்ணை முலைப்பால்தயிலம் பெரியவர்களுக்கும்வேண்டிய மருந்துவகைகள் செந்தூரபஸ்மம் முதலியவைகளும் உண்டு. தேவையானவர்கள் நோயின்விபரமெழுதினுடனே பதிலறிவிக்கப்படும்.

வை. கந்தையாவைத்தியர்
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்

---

## ஸர்வஜனரஞ்சனீ.

### 6 சஞ்சிகைகள் வெளியாய் விட்டன.

இது டிம்மியில் 80 பக்கங்கள் கொண்ட ஒரு மாதச் சஞ்சிகை இதில் ஸமஸ்கிருதத்திற்குச் சரியாக தமிழில் மொழிபெயர்த்த அநேக புஸ்தகங்களும் மனதிற்கு இன்பந்தரத்தக்க அநேக தமிழ் நாவல்களும் நாடகங்களும் நல்ல தமிழ் நடையில் வெளியிடப்படுகின்றன. வேண்டியவர்கள் அடியிற்கண்டவிலாசத்திற்கு எழுதித்தருவித்துக்கொள்ளவும்.

## இனிய தமிழ் நாவல்கள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அற்புதராமாயணம் (தமிழ்வசனம்) | | | | 0 | 10 |
| பிரபோதசந்திரோதயம் (நாடகம்) | | | | 0 | 10 |
| விக்ரமோர்வசீயம் | 0 | 8 | வேதவல்லி | 0 | 4 |
| மாயாவதி | 0 | 8 | சாரதாநந்தர் | 0 | 4 |
| ஞானம்பாள் | 0 | 6 | விஜயலட்சுமி | 0 | 10 |
| மங்களாம்பாள் | 0 | 8 | சுகதேவி | 0 | 8 |
| கிருஷ்ணவேணி | 0 | 8 | கல்யாணி | 0 | 2 |
| லீலா | 0 | 12 | ஆனந்தசுந்தரி | 0 | 12 |
| ஊசிகரி | 1 | 0 | பவாநந்தர் | 0 | 8 |
| ஜடாவல்லவர் | 1 | 8 | | | |

இன்னும் எல்லா மாதிரியும் தமிழ் நாவல்களும் கிடைக்கும்.

R. வைத்தியநாதய்யர்
"வாணீபூஷணம்"
திருவல்லிக்கேணி, சென்னை.

---

தூயதோர்மறைகளாலும் துதித்திடற்கரிய செவ்வேள், செய்யபேரடிகள்வாழ்க சேவலும்மயிலும்வாழ்க, வெய்யசூர்மார்புகீண்ட வேற்படைவாழ்கவன்றன், பொய்யில்சீரடியார்வாழ்க வாழ்கவிப் புவனமெல்லாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புதிய சுகந்த மூக்குத்தூட்சாலை.

யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணையில் ஐயன்தெருவென்றழைக்கப்படும் பெரியகடைத்தெருவில் எம்மால் மேற்படி மூக்குத்தூட்சாலை ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றது. திருச்சிறுப்பள்ளி, திண்டுக்கல், சேலம் ஆகிய இடங்களிலிருந்தே புகையிலையை வரவழைத்துப் பொடிசெய்திருக்கிறோம். இந்த உத்தம சுகந்தத்தூளைத் தினந்தோறும்பாவித்து வருபவர்களுக்கு, ஈளை இருமல் கசம் ஆகியநோய்கள் பரிதிகண்டபனிபோற் பறந்துபோகும் விரும்பினோர் முற்பணமனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம் வி. பி. மூலமாகவும் அனுப்பப்படும்.

1 வது வாசப்பொடி 1 ரூ ரூபா 2
2 வது செப்பொடி ,, ,, 1—75 சதம்

திறமானபற்பொடியு மெம்மிடமிருக்கின்றது.

த மு இராமையா
ஐயன்தெரு, யாழ்ப்பாணம்.

## ஸ்ரீபரமேஸ்வர திருவுருவப்படம்.

வர்ணத்துடன் போட்டோகிராப்பில் எடுத்திருப்பதாகிய இப்பொருட் படம் சைவசமயிகளாகிய பக்தர்கள் ஒவ்வொருவர் வீடுகளிலும் வைத்துப் பூஜிப்பதற்கு மிகச்சிறந்ததோடு சிற்பசாத்திரத்துக்கொத்திருப்பதால் சகளஸ்வரூபத்தியானத்துக்கு மிகஉரியமையாததென்பதும் திண்ணம். முழுவிபரமும் படத்துடன்வரும் துண்டுப்பத்திரிகையாலறியலாம் 6 படங்களுக்கு ஓரேதடவையில் ஆர்டர் செய்தால் 100 க்கு 25 வீதம் கம்மிஷன் கொடுக்கப்படும். படஅளவு 20 † 4 உள்அளவு 17 † 13 அங்குலம். வேண்டுவோர் இவ்விலாசத்துக்கெழுதுக. படம் 1க்கு அணு 12. தபால்சார்ஜ வேறு.

சு சந்திரசேகரம்பிள்ளை
ஆர்ட்டிஸ்ட்பொட்டக்கிராப்பர்
அருந்தவம்புலம்
நீர்முளைப்போஸ்டு
தஞ்சாவூர் ஜில்லா.

## டெல்லிமுடிசூட்டுப்படம்

(லண்டன்போட்டோ)

இது எமது ஞானப்பிரகாசஆபீசிற் பெற்றுக்கொள்ளலாம் இதன் விலை ரூபா 1 சதம் 75

## சண்முகநாதன்புக்டிப்போ.

இது வண்ணார்பண்ணையில், நெடுங்காலம் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் புத்தகசாலை. இதில், பள்ளிக்கூடத்துப் பிள்ளைகளுக்கும், உபாத்தியாயர்களுக்கும், சொத்தாரிசமாருக்கும் அச்சுக்கூடத்தவர்க்கும் வேண்டும் கடுதாசிவகைகள், மைப்பென்சில்கள், இங்கிலீஷ், தமிழ், கிரந்தப்புத்தகங்களும், மிகமலிவாக விற்கப்படும். இந்துக்கல்லூரிக்கும் செட்டித்தெருபள்ளிக் கூடத்திற்கும் மத்தியில், இதன்கிளையாய் இப்பொழுது புதிதாக ஒரு புக்டிப்போ திறக்கப்பட்டிருக்கின்றது பிறவூரவர்களுக்கு வி. பி. மூலமாகவும் அனுப்பப்படும். விபரமறிய விரும்புவோர் காகிதமெழுதி அறிந்துகொள்ளலாம்.

S. S. சண்முகம்
சண்முகநாதன் புக்டிப்போ
வண்ணார்பண்ணைப்போஸ்டு
யாழ்ப்பாணம்

## மதுரைத் தமிழ்ச்சங்கம்.

ஐயா!

நாளது பரிதாபிஸு வைகாசி மீ ககம்வுக்குச் சரியான 1912ஸு மேமீ 24உ மாலை 4 மணிக்கு, மதுரை, சேதுபதி ஹைஸ்கூல் ஹாலில் மதுரைத் தமிழ்ச்சங்கத்தின் பதினோராவது வருஷோத்ஸவம் நடத்தப்பெறும். அக்காலத்துத் தமிழபிமானிகளை, விஜயஞ்செய்து அம்மஹோத்ஸவத்தைச் சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மகா-ள-ள-ஸ்ரீ ராவ்பகதூர்:
*M. Arumugam Pillai Avergal, B.A., Treasury Deputy Collector Ramnad* அக்கிராசனம்வகிப்பார்.

இங்ஙனம்,
P. S. சுப்பிரமணிய ஐயர்
அக்கிராசனாதிபதி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org